விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 106 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 21 வெள்ளிக்கிழமை (04.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## இலங்கைப் பொருட்களுக்கு
# 44 சதவீத வரி
### அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் புதிய வரி விதிப்பால் அதிர்ந்துபோன அநுர அரசாங்கம்



(கொழும்பு)
இலங்கைப் பொருட்களுக்கு 44 சத வீத வரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் புதிய வரி விதிப்பால் அநுர அரசாங்கம் அதிர்ந்து போயுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## பாரதப் பிரதமர் மோடி இன்று இலங்கை விஜயம்



(கொழும்பு)
ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வின் அழைப்பின் பேரில், பாரதப் பிரதமர் நரேந்திர மோடி மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று வெள்ளிக்கிழமை மாலை இலங் 16

## நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில்
### நீதிமன்றத் தீர்ப்பு இன்று

(கொழும்பு)
உள்ளூராட்சி மன்றத் தேர் தலுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள் மீதான உத்தரவு இன்று வழங்கப்படும் என்று மேல்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நீதியரசர் (செயற் 15

## காலியில் துப்பாக்கிச் சூடு கணவன் பலி; மனைவி படுகாயம்

(காலி)
காலியில் தம்பதியினர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கணவன் உயிரிழந்ததுடன் மனைவி படுகாயமடைந்துள்ளார்.

காலி ஹிக்கடுவ - குமாரகந்தப் பகுதியில் நேற்றிரவு 7 மணியளவில் இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தில் 15

## 15 கிலோ கஞ்சாவுடன் வவுனியாவில் மூவர் கைது

(வவுனியா)
வவுனியாவில் 15 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வவுனியா, கணேச புரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோத னையின்போது மறைத்து வைக்கப்பட்டி ருந்த நிலையில் 15 கிலோ கஞ்சா கண்டு 15

## பொய்த்துப்போன எதிர்பார்ப்பு
# எமது பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படவில்லை
### நீதியமைச்சருடனான கலந்துரையாடல் தொடர்பில் தையிட்டி காணி உரிமையாளர்கள்

(யாழ்ப்பாணம்) நீதியமைச்சர் ஹர்சன நாணயக்காரவுடனான கலந்துரை யாடலில் தையிட்டியில் எமது காணி தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படவில்லை என தையிட்டி காணி உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.
(02ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் ஊடகங்களைத் தவிர்க்க பின்கதவால் நழுவிய நீதியமைச்சர்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் ஊட கங்களைத் தவிர்ப்பதற்காக நீதியமைச்சர் ஹர்சன நாண யக்கார பின்கதவால் நழுவிச் சென்றார்.

தையிட்டி திஸ்ஸ விகாரை காணி விடுவிப்புத் தொடர் பான முக்கியமான கலந்து ரையாடல் நீதியமைச்சர் ஹர் சன நாணயக்கார உள்ளிட்ட அரச தரப்பு பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் நேற்று யாழ்ப்பாணம் நாக விகாரை யில் இடம்பெற்றது.

தையிட்டி காணி உரிமை யாளர்கள் மதத் தலைவர்களுடன் 15

## அராலி கிழக்கில்
## கருநாக பாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)
அராலி கிழக்கில் கருநாகபாம்பு தீண் டியதில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

இதில் புத்தூர் மேற்கைச் சேர்ந்த 04

## கச்சதீவு பிரச்சினையை வைத்து தமிழகத்தில் வாக்கு வேட்டை
### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்



(யாழ்ப்பாணம்)
கச்சதீவு பிரச்சினையை வைத்து தமிழகத்தில் வாக்கு வேட்டை அரசியல் நடத்தப்பட்டு வருகின் றது. எது எப்படி இருந்தாலும் கச்சதீவென்பது இலங்கைக்குரியதாகும் என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் 15

## முதிர்ச்சியுடன் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லுங்கள்
### அமெரிக்க வரி விதிப்பு தொடர்பில் அரசுக்கு சஜித் ஆலோசனை

(கொழும்பு)
அமெரிக்காவின் வரி விதிப்புத் தொடர்பில் முதிர்ச்சியுடன் பேச்சுவார்த் தையை முன்னெடுத்துச் செல்லுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அநுர அரசுக்கு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## எமது பிரச்சினை...

தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட பொது மக்களின் காணிக்குள் அத்துமீறிக் கட்டப்பட்ட தையிட்டி விகாரை தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணம் நாக விகாரையில் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, பிரதியமைச்சர் முனீர் முலாபீர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்ட அதே வேளை, தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகப் பிரதிநிதிகள், யாழ். மாவட்ட சர்வமதப் பேரவைப் பிரதிநிதிகள் தையிட்டி காணி உரிமையாளர்கள், செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த கலந்துரையாடல் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே வெளியே வந்த அமைச்சர்கள் உள்ளிட்ட அரசாங்கத்தின் பிரதிநிதிகள் பிரதான நுழைவாயிலில் ஊடகவியலாளர்கள் காத்துக்கொண்டிருக்கும் நிலையில் மாற்றுப்பாதை வழியாக வெளியேறிச் சென்றனர்.

மேலும் குறித்த கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர், குறித்த விவகாரத்துக்கு சுமுகமான ஓர் தீர்வை வழங்குவதற்கு தாம் முனைப்புக் காட்டும்போதும், தேர்தல் காலத்தில் இவ்வாறான கலந்துரையாடல்களில் தாம் ஈடுபடுவது பொருத்தமற்றது எனக் கூறி வெளியேறியுள்ளதாகக் கலந்துரையாடலில் பங்கேற்றவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளரும் காணி உரிமைக்கான மக்கள் கூட்டணியின் உறுப்பினருமான திருவரங்கன், குறித்த விவகாரத்தில் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முனைப்புடன் இருக்கின்றோம்.

மேலும், தேர்தல் விவகாரத்தை காரணம் காட்டி அமைச்சர்கள் வெளியேறினாலும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் இலகுவாக தீர்க்கக்கூடிய ஒரு பிரச்சினை இது என்பதுடன், நீதி யார் பக்கம் என்பது தொடர்பான தெளிவு அனைவருக்கும் உண்டு. எனினும் குறித்த விவகாரத்துக்கான தீர்வை எட்டுவதற்கான முன்முனைப்பை முன்வைக்க அவர்கள் தயங்குகிறார்கள் என குற்றம் சாட்டினார்.

இந்த தயக்கம் தொடருமாக இருந்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காது. எனவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தத் தயக்கத்தில் இருந்து வெளியே வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

(ம-4,33)


### வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு
ஐஸ்கிறீம் மற்றும் கேக் தயாரிப்பவர்கள்
சமையல் உதவியாளர்
துப்புரவுப் பணியாளர்கள்
தேவை.
ஆண், பெண் இருபாலாரும், இன்றே அழையுங்கள்
தொடர்பு : 077 729 2840
(C-2616)



யாழ். நகரிற்கு முதல் முறையாக

### Heron Consultancy (Pvt) Ltd

நீங்கள் வெளிநாடு செல்ல காத்திருப்பவர்களா?
நாம் அதற்கான ஆலோசனையும் தீர்வையும்
உங்களுக்குப் பெற்றுத் தருவோம்.



- UK
- Canada
- Australia
- France
- Italy
- Swiss

நாடுகளுக்கு Visit visa ஏற்பாடு செய்து தரப்படும்



- Newzealand
- Australia
- UK
- Canada Student visa

மற்றும்

- UK/ Canada

நாடுகளுக்காக வேலைவாய்ப்பு சம்பந்தமான தீர்வு தரப்படும்.

(C-2614)

Heron Consultancy (Pvt) Ltd
Tilko hotel Jaffna
06.04.2025, 9.00 am to 5.00 pm
முன்பதிவுகளுக்கு :
Sarmila - 076 484 7301
Ragu - 076 304 4839



### சேவைநலன் பாராட்டுவிழா வாழ்த்துக்கள்




திருமதி கிறிஸ்ரின் நிக்செலா
சத்தியவதனி தியோஜினஸ்
B.A (Hons), Dip in Education
02.04.2025

சேவை விபரம்

- யா/ இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம் (1999 - 2012)
- யா/ காரைநகர் இந்துக்கல்லூரி (2012 - 2015)
- யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை (2015 - 2025)

ஆசிரியப்பணியின் 26 வருடங்களில் எமது கல்லூரியில் 10 வருடங்களாக மாணவர்கள் மனமகிழ்ந்திட, மனமுவந்து கல்விச் சேவையாற்றிய நீங்கள், ஓய்வுகாலத்தில் உடல், உள ஆரோக்கியத்தோடும் மனமகிழ்ச்சியோடும் என்றும் இன்பமாய் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம் -
யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி

(3843)



### பாஷாண உத்வாசன சபிண்டீகரண அழைப்பு



கடந்த 22.03.2025 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர் வெற்றிவேலு சுப்பிரமணியம்
(சிவம் ஐயா)

அவர்களின் பாஷாண உத்வாசனம் (கல்லெடுப்பு) நாளை 05.04.2025 சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். மறுநாள் 06.04.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

குருக்கள் குடியிருப்பு,
கரம்பைக் குறிச்சி மேற்கு, வரணி.
(C-2610)
தகவல்
குடும்பத்தினர்



### 6 வது ஆண்டு நினைவு நாள்



மண்ணில் 21.06.1983
விண்ணில் 04.04.2019

அமரர் பாலேந்திரன் சுபேஸ்

காலங்கள் கடந்தாலும்
ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் மனதில் நீ
என்றும் நிலைத்திருப்பாய்
அன்பின் அடையாளமாக
அறத்தின் புதல்வனாக
அன்பின் சிவமாக என்றும்
எங்களில் வாழ்கிறாய் தம்பி

(996)

கிஷான்,
துன்னாலை தெற்கு, கரவெட்டி.
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பொருட்களுக்கு பாரிய வரி விதித்த ட்ரம்ப்

## கடும் தாக்கத்திற்கு உள்ளாகவுள்ள இலங்கை

(வோஷிங்டன்)

**இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 44 சதவீத வரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்துள்ளார்.**



இது தொடர்பான வரியை அமெரிக்க ஜனாதிபதி நேற்று முன்தினம் அறிவித்துள்ள நிலையில், இந்த வரி நாளை முதல் அமுல்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் 60 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான புதிய வரிப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் வர்த்தக ஏற்றத்தாழ்வைக் கட்டுப்படுத்துவதும், அமெரிக்கத் தொழில்களை ஊக்குவிப்பதுமே இந்தப் புதிய வரிகளை விதிப்பதன் நோக்கம் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய வரிக் கொள்கையின்படி, அனைத்து இறக்குமதி பொருட்களுக்கும் 10 சதவீத வரி உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அமெரிக்காவுடன் வர்த்தக உபரியை நடத்தும் நாடுகளுக்கு அதிக வரி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கை மீது 44 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில், அமெரிக்காவால் உலகில் அதிக வரி விதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் முதல் ஐந்து நாடுகளுக்குள் இலங்கை இடம்பிடித்துள்ளது.

இதுவரை, இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்கா 12.2 சதவீத வரியை விதித்துள்ள நிலையில், இந்தப் புதிய வரி விதிப்பு நாட்டின் ஏற்றுமதித் துறையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அமெரிக்காவிற்கு இலங்கையில் இருந்தே அதிக அளவில் ஆடை ஏற்றுமதி மேற்கொள்ளப்படுவதுடன், இந்த வரி விதிப்புடன் அந்தத் துறைக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

2024 ஆம் ஆண்டில், அமெரிக்கா இலங்கையிலிருந்து 3 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்ததுடன், இந்த ஆண்டு ஜனவரியில் மட்டும் 346 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-8)

### மேர்வின் சில்வாவுக்கு மீண்டும் விளக்கமறியல்

(கொழும்பு)

போலி ஆவணங்களை தயாரித்து அரசுக்கு சொந்தமான நிலத்தை தனியாருக்கு விற்றதாக கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சரும் மேலும் இருவரும் நேற்றுக் காலை மஹர நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் ஏப்ரல் 9 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதற்கிடையில், வழக்கு விசாரணையின் போது, சம்பவம் தொடர்பாக கைது செய்யப்படாமல் இருக்கும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர உட்பட மூன்று நபர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்யுமாறு குற்றப் புலனாய்வுத் துறை (சிஐடி) நீதிமன்றத்தைக் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, சிஐடியின் கோரிக்கையை பரிசீலிக்க நீதிமன்றம் ஏப்ரல் 9, 2025 அன்று திகதி நிர்ணயித்துள்ளது. (நி-8)

## தபால் மூல வாக்களிப்பிற்காக 7 இலட்சம் பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சுமார் 700,000 தபால் மூல வாக்கு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியுள்ள நபர்களிடமிருந்து மார்ச் 3 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பணிகளுக்கான அரச அதிகாரிகள் குறித்த தகவல் கணக்கெடுப்பு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, எந்தவொரு அரச அதிகாரியும் இன்று வரை தங்கள் தகவல்களை வழங்கவில்லை என்றால், அந்தத் தகவலை சம்பந்தப்பட்ட அதிகாரியின் அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கு, அவர்களின் நிறுவனத் தலைவரின் பரிந்துரைகளுடன் அனுப்புமாறு தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க கோரியுள்ளார்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் தபால் மூல வாக்களிப்புகள் ஏப்ரல் மாதம் 22, 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

### வீதித்தடை தொடர்பான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின்நீரிணைப்பு வேலைகளுக்காக மானிப்பாய் வீதி (பிரப்பங்குளம் சந்தி ஐயனார் கோவில் வீதி சந்தி வரை) மற்றும் ஓட்டுமடம் வீதி (முஸ்லிம் கல்லூரி வீதியில் இருந்து காங்கேசன்துறை வீதி வரை) என்பன 04.04.2025, 05.04.2025, 06.04.2025 ஆகிய திகதிகளில் இரவு 8 மணி தொடக்கம் காலை 6 மணி வரை மூடப்பட்டிருக்கும் என்பதனை அறியத்தருவதுடன் வீதி மூடப்பட்டிருக்கும் காலப் பகுதியில் வீதியினைப் பயன்படுத்துவோர் போக்குவரத்தினைச் சிரமமின்றி மேற்கொள்ள மாற்றுப் பாதையினைப் பயன்படுத்துமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-8)

## அநுராதபுரத்தில் விபத்து யாழ்ப்பாணத்தவர் படுகாயம்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் நபரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் யாழ்ப்பாணம் - சாகவச்சேரியைச் சேர்ந்த 44 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளதுடன் விபத்தின் காரணமாக குறித்த நபரின் கால் அகற்றப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பாரவூர்தி வேகக் கட்டுப்பாட்டை இழந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு பாரவூர்தி மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் விபத்தில் படுகாயமடைந்த நபர் சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து குறித்து அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

## 23 பல்பொருள் அங்காடிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

23 பல்பொருள் அங்காடிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பொருட்களின் விலைகளை காட்சிப்படுத்தாமை, அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, வாடிக்கையாளர்களை தவறாக வழிநடத்தியமை மற்றும் பொருட்களில் குறிப்பிட வேண்டிய தகவல்கள் இன்றி விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடத்திலும் 172 பல்பொருள் அங்காடிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு சுமார் 6.5 மில்லியன் ரூபா அபராதம் வசூலிக்கப்பட்டது.

பல்பொருள் அங்காடிகள் உள்ளிட்ட சந்தைகளில் பொருட்களை கொள்வனவு செய்யும் போது காலாவதித் திகதி மற்றும் பிற தகவல்களையும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் நுகர்வோர் விவகார அதிகார சபை மக்களை அறிவுறுத்தியுள்ளது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நுகர்வோர் விவகார அதிகாரசபை நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ஹெரோயினுடன் கைதான நபருக்கு மரண தண்டனை விதிப்பு!

(கொழும்பு)

16 கிராமுக்கும் அதிகமான ஹெரோயின் வைத்திருந்தமை, போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

நீண்ட விசாரணைக்குப் பின்னர், இந்தத் தீர்ப்பை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.எஸ்.எஸ். சபுவிட நேற்று வழங்கினார்.

2019 பெப்ரவரி 17 ஆம் திகதி கிரேண்ட்பாஸில் நடத்தப்பட்ட சோதனையின் போது 16.88 கிராம் ஹெரோயினுடன் குற்றம் சாட்டப்பட்டவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர், ஹெரோயின் வைத்திருந்தமை, கடத்தியதற்காக குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்தார்.

நீண்ட விசாரணைக்குப் பிறகு தீர்ப்பை அறிவித்த நீதிபதி, குற்றம் சாட்டப்பட்டவர் மீது அரச தரப்பு சுமத்திய குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

அதன்படி, 47 வயது குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்கடேஷ் அதிரடி கொல்கத்தா சரவெடி

## ஹட்ரிக் தோல்வியடைந்தது சன்ரைசர்ஸ்





வெங்கடேஷ் அரைச்சதம் விளாச, கொல் கத்தா அணி 80 ஓட்டங்கள் வித்தியா சத்தில் வெற்றி பெற்றது.

கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதா னத்தில் நேற்று நடந்த பிரீமியர் லீக் போட்டியில் நடப்பு சம்பியன் கொல்கத்தா அணி, ஹைதராபாத்தை எதிர்கொண் டது. நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் பந்து வீசசைத் தேர்வு செய்தது.

கொல்கத்தா அணிக்கு சுனில் நரைன் (7), குயின்ரன் டி கொக் (1) ஜோடி மோசமான ஆரம்பம் வழங்க, 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

பின் அணித் தலைவர் ரஹானே, ரகுவன்ஷி இணைந்தனர். கம் மின்ஸ், ஷமி பந்துகளை சிக்ச ருக்கு விரட்டிய ரஹானே, சிமர்ஜீத் சிங் பந்திலும் சிக்சர் அடித்து மிரட்டினார். இவருக்கு சுப்பர் "கம்பெனி" கொடுத்தார் ரகு வன்ஷி. ஷமி பந்தில் பவுண்டரி, சிமர்ஜீத் பந்தில் சிக்சர் என விளா சினார். இந்த ஜோடி 51 பந்து களில் 81 ஓட்டங்கள் எடுத்தபோது, ரஹானே (38) ஆட்டமிழந்தார்.

**ரகுவன்ஷி அரைச்சதம்**

ரகுவன்ஷி 43 ஓட்டங்கள் எடுத்தபோது, ஜீஷான் பந்தில் கொடுத்த பிடியை நிதிஷ் குமார் நழுவ விட்டார். வாய்ப்பை பயன் படுத்திய இவர், 30 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். பிரீமியர் தொடரில் இவரது இரண் டாவது அரைச் சதம் இது. அதே வேகத் தில் ரகுவன்ஷி (50), கமிந்து மெண்டிஸ் பந் தில், ஹர்ஷல் படேலின் "சுப் பர்" பிடியெழுப் பில் ஆட்டமிழ ந்தார்.

**வெங்கடேஷ் அபாரம்**

வெங்கடேஷ், ரிங்கு சிங்இணை ந்து அணியின் ஓட்ட எண்ணி க்கையை உயர் த்தினர். கம் மின்ஸ் வீசிய 19ஆவது ஓவரில் வெங்கடேஷ். 3 பவுண்டரி, ஒரு சிக்சர் அடிக்க, மொத்தம் 21 ஓட்டங்கள் எடுக்கப் பட்டன. வெங்கடேஷ் 25 பந்து களில் அரைச்சதம் எட்டினார். இவர் 29 பந்துகளில் 60 ஓட்டங்கள் (ஸ்டிரைக் ரேட் 206.89) எடுத்து ஹர்ஷல் பந்தில் ஆட்டமிழந்தார்.

கடைசி பந்தில் ரசல் (1) ரன் அவுட்டாக, கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 200/6 ஓட்டங்களைக் குவித்தது. ரிங்கு சிங் (32) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**எளிய வெற்றி**

கடின இலக்கைத் துரத்திய ஹைதராபாத் அணிக்கு ஆரம் பமே அதிர்ச்சி காத்திருந்தது. வைபவ் அரோரா வீசிய முதல் பந்தில் பவுண்டரி அடித்த அபா யகரமான ஹெட் (4), 2ஆவது பந்தில் ஆட்டமிழந்தார். அபிஷேக் சர்மாவை (2), ஹர்ஷித் வெளி யேற்றினார். மீண்டும் வந்த வைபவ், இஷான் கிஷானை (2) வீழ்த்த, ஹைதராபாத் அணி 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக் களை இழந்து தள்ளாடியது. நிதிஷ் குமாரும் (19) நிலைக்க வில்லை.

நரைன் பந்தில் கமிந்து மெண் டிஸ் (27) ஆட்டமிழந்தார். கிளாசன் 33, கம்மின்ஸ் 14 ஓட்டங்கள் எடுத்தனர்.

இறுதியில் ஹைதராபாத் அணி 16.4 ஓவர்களில் 120 ஓட்டங் களுக்கு சகல விக்கெட்டுக்களை யும் இழந்து 80 ஓட்டங்களால் படு தோல்வியடைந்தது. (ம-4)


## வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்
## 2025 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்கள்

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாட்டிறைச்சிக்கடை, கோழி இறைச்சிக்கடை என்பவற்றிற்கான **2025.04.11** ஆம் திகதி தொடக்கம் **2025.12.31** ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்கான குத்தகைக் கேள்விகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** :- **04.04.2025 தொடக்கம்10.04.2025 ந.ப.12.00 மணி வரை**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி** :- **10.04.2025 பி.ப. 2.00 மணி வரை**
**கேள்விதிறக்கும் திகதி** :- **10.04.2025 பி.ப. 2.00 மணி**

1. கேள்விப்பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமும் பணமாகச் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.
2. கேள்வி மனுக்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **செயலாளர் நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை** என்ற முகவரிக்கு நேரடியாக / தபாலிலும் இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாக / பதிவுத் தபாலிலும் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அத்துடன் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் மூலப்பிரதி/ இணைப்பிரதி மற்றும் கடை பெயர்என்பன தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.
3. கேள்வி விண்ணப்பங்களை பெற விரும்புபவர்கள் தத்தமது தேசிய அடையாள அட்டை, கிராம சேவகரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மற்றும் குடும்ப வதிவிட அட்டை ஆகியவற்றின் மூலப்பிரதிகளையும் நிழற்பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும். (நிழற்படப் பிரதிகள் உறுதிப்படுத்திய பின்னர் மூலப் பிரதிகளை மீளப் பெற்றுக் கொள்ளலாம். )
4. நகராட்சிமன்றத்தினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
6. இக் கேள்வி அறிவித்தல் தொடர்பாக வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற செயலாளரால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
7. மேலதிக விபரங்களை 021 226 3973 என்ற தொலைபேசி இலக்கம் மூலமாக அலுவலக கடமை நேரத்திலும் 077 882 6577 என்ற WhatsApp இலக்கம் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
8. குத்தகை தொடர்பான நிபந்தனைகளை அலுவலகத்திலும் அலுவலக விளம்பரப்பலகைகளிலும் பார்வையிடலாம்.

**2025 ஆம் ஆண்டிற்குரிய மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ. இல | குத்தகை விபரம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ( ஒப்பந்த காலத்துக்கு ) | கேள்விவைப்பு மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | **இறைச்சிக்கடைகள்** | | | |
| | 1.1 வல்வெட்டித்துறை கோழி இறைச்சிக்கடை | 43,800.00 | 1000.00 | 1000.00 |
| | 1.2 வல்வெட்டித்துறை மாட்டிறைச்சிக்கடை (கொல்களம்- வேறு பொருத்தமான சபைகளின் மூலம் ஏற்பாடு செய்து தரப்படும்) | 1,094,400.00 | 5000.00 | 1000.00 |

**செயலாளர்**
**நகராட்சி மன்றம்,**
**வல்வெட்டித்துறை.**

(C-261) 03.04.2025


## கருநாக...

கணேசக் குருக்கள் கௌரிதாசன் (வயது - 34) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே மரணமடைந்துள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி அராலி கிழக்கிலுள்ள கோவிலுக்குச் சென்ற வேளை வலையினுள் 5 அடி நீளமான கருநாகபாம்பு இருந்துள்ளது.

இவர் வழமையாக பாம்பு களைக் கையால் பிடிக்கக்கூடிய தேர்ச்சியுடையவர். குறித்த பாம் பைக் கையால் பிடித்து இழுத்த போது பாம்பு குறித்த நபரின் கையில் தீண்டியுள்ளது.

வைத்தியசாலைக்குச் செல்லாது தீண்டிய இடத்திற்கு தேசிக்காய்ப்புளி இட்டுள்ளார்.

பின்னர் வீட்டிலிருந்தவர் களின் வேண்டுகோளுக்கு இணங்கி (01.04.2025) செவ்வாய்க்கிழமை இரவு ஒரு மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டார்.

இந்நிலையில், மறுநாள் (நேற்று முன்தினம்) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதி காரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற் கொண்டார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் குருமணியின் 44 ஆவது குருபூசை



(யாழ்ப்பாணம்)

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்தாபகரும் முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 44 ஆவது குருபூசை இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நல்லை ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆதீனத்தில் மகேஸ்வரபூசையும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ரி-8)

# குடிநீருக்கான சில்லறை விலை வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீருக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயம் செய்யும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. நுகர்வோர் விவகார அதிகார சபை இந்த வர்த்தமானியை வெளியிட்டுள்ளது.

அதன்படி, 500-999 லீற்றர் 70 ரூபாவாகவும், 1-1,499 லீற்றர் 100 ரூபாவாகவும், 1.5-1,999 லீற்றர் 130 ரூபாவாகவும், 2-2,499 லீற்றர் 160 ரூபாவாகவும், 5-6,999 லீற்றர் 350 ரூபாவாகவும் புதிய விலை திருத்தியமைக்கப்பட்டுள்ளது. (ரி-8)

# யோகர் சுவாமிகளின் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

தவத்திரு யோகர் சுவாமிகளின் 61 ஆவது ஆண்டு குரு பூசை தினம் எதிர்வரும் 07.04.2025 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொழும்புத் துறை சுவாமிகள் சமாதிக் கோவிலில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை சுவாமிகளின் திருவடிக்கு அபிஷேகம் நடைபெற்று தீபாராதனையைத் தொடர்ந்து வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையே நடாத்தப்பட்ட நற்சிந்தனை பாராயணப் போட்டி, பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களின் நிகழ்வுகள் நடைபெறுவதோடு மாணவர்களுக்கான ஊக்குவிப்புப் பரிசில் வழங்கும் நிகழ்வுகளும் நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ரி-8)

## புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 10 ஆம் திகதி

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 10 ஆம் திகதி நடைபெறுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி குறித்த பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏப்ரல் 4 முதல் ஏப்ரல் 30 வரை ஏற்றுக்கொள்ளப்படுமென பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ரி-8)


## தேசிய வெளிக்கள நிலையம்
### தொண்டைமானாறு

2022, 2023 வருடங்களுக்குரிய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வடமாகாண மாவட்டங்களில் முதன்மை சித்தி பெற்ற மாணவரைக் கௌரவித்தல்.

**காலம்: 06.04.2025 ஞாயிறு காலை 10.00 மணி**

**இடம்: 133, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**பிரதம விருந்தினர்: திரு.செ.உதயகுமார் (முன்னாள் மாகாணக் கல்விப்பணிப்பாளர்)**

மேற்படி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**நிர்வாக சபை,**
**தேசிய வெளிக்கள நிலையம்,**
**தொண்டைமானாறு.** (3842)



## மாவட்ட நீதிமன்றம், மன்னார் அறிவித்தல்

வழக்கு இலக்கம்: D 781/23
தன்மை: **மணநீக்கம்**

**அனுஜன் பிரியதர்சினி,**
செம்மணிதீவு,
முருங்கன்.

**-வழக்காளி**

**எதிர்**

**தம்பிப்பிள்ளை அனுஜன்**
A.P.C ஒழுங்கை,
பிரதான வீதி,
காரைதீவு 11,
அம்பாறை, கிராம சேவகர் பிரிவு
42/D/காரைதீவு-11

**-எதிராளி**

மேற்பெயர் குறிப்பிட்ட எதிராளிக்கு

மேற்படி வழக்கின் வழக்காளி பிரதின்படி தம்பிப்பிள்ளை அனுஜன் ஆகிய உமக்கு எதிராக விவாகரத்து வழக்கொன்றை மன்னார் மாவட்ட நீதிமன்றில் தொடர்ந்துள்ளார். குறித்த வழக்கானது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது. குறித்த தினத்தில் காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்றில் தம்பிப்பிள்ளை அனுஜன் ஆகிய நீரோ அல்லது தங்களது பதிவுபெற்ற சட்டத்தரணியோ தோன்றி உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் அதனைக் கோப்பிடுமாறு தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட திகதியன்று அல்லது அதன் முன்னர் நீவீர் மறுமொழி கோப்பிடத் தவறும் பட்சத்தில் வழக்கானது மறு கட்சிக்காரர் இல்லாமல் மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படும் என அறிந்து கொள்ளுமாறு இத்தால் தேவைப்படுகின்றீர்.

**மன்றின் கட்டளைப்படி**

2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி

ஒப்பமிடப்பட்டுள்ளது

பதிவாளர்

ஆங்கிலத்தில் பதவி இலச்சினையிடப்பட்டுள்ளது (சி-2607)


# இராசிபலன்

04.04.2025
பங்குனி 21, வெள்ளிக்கிழமை
சப்தமி பின்னிரவு 2.19 மணிவரை

மிருகசீரிடம் முற்பகல் 11.35 மணிவரை
சுபநேரம் 6.10-7.40 மணிவரை
இராகுகாலம் 10.40-12.10 மணிவரை

சந்திராஷ்டமம்-விசாகம், அனுஷம்

வளவன்




குடும்ப மகிழ்ச்சி கூடும், உறவினர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் காரிய வெற்றி காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.




தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம்.




கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்ளும் நாள், பயணங்களால் பலனுண்டு.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வியாபார விருத்தியுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வழிபாட்டால் ஆர்வம் கூடும், காரிய அனுகூலமுண்டு.




கடவுளை வழிபட்டுக் காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், பொதுநல ஈடுபாட்டில் புகழ் பெறுவீர்கள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.




காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செய் தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நிலை உயரும்.

**இன்று நாம் செய்யும் நன்மை நாளை நாம் பெறும் இன்பம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு

## சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்துங்கள்

### இந்தியப் பிரதமரிடம் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை ஏற்படுத்த பெறுமதிமிக்க ஒத்துழைப்பை வழங்குமாறு வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.**

இந்தியப் பிரதமர் இலங்கைக்கு வர இருக்கின்ற நிலைமையில் தமிழ் மக்களுக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்க முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென பிரதமருக்கான மகஜரொன்றை யாழ்.இந்திய தூதரகத்தில் நேற்று வியாழக்கிழமை கையளித்தனர்.

குறித்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, ஒரு நட்பான அயல் நாடு எனும் வகையில் இலங்கையின் நெருக்கடி காலங்களில் இந்தியா எப்போதும் உதவிக்கு வருகிறது.

2022ஆம் ஆண்டு இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா வழங்கிய மாபெரும் பங்களிப்பை நாம் எப்போதும் நன்றியுடன் நினைவிற் கொண்டுள்ளோம்.

அவ்வாறே, 1980களில் இலங்கையின் தேசியப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடுவராக இந்தியா ஆற்றிய வகிபாகத்தையும் நினைவிற் கொண்டுள்ளோம்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச் சட்டமானது குறிப்பிட்ட சில உரிமைகளை இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ் பேசும் மக்களுக்கும் ஒட்டுமொத்த இலங்கைக்கும் உறுதிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மாகாண ஆட்சிவழங்கப்பட்டது.

அத்துடன் தமிழ் மொழியானது இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் அலுவல்கள் மற்றும் நிர்வாக மொழியாக ஏற்கப்பட்டுள்ளது.

மேலும் மாகாண உயர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு அவற்றுக்கு மேன்முறையீட்டு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரதான நோக்கமானது, தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண்பதும், இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பதுமாகும்.

எனினும், 13 ஆவது திருத்தச் சட்டமானது வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த மக்களுக்கு இறையாண்மை உரிமைகளுடன் கூடிய நிலையான அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தவில்லை.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியானவர் தனது அதியுயர் அதிகாரத்தைப் பயன்படுத்தி மாகாண ஆட்சியை செயலிழக்க செய்ய முடியும் என்பது இந்த மாகாண ஆட்சி முறைமையின் இன்னொரு மட்டுப்படுத்தலாகும்.

துரதிஷ்டவசமான நிகழ்வாக, இலங்கையின் உச்ச நீதிமன்றமானது 2006 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பு "செல்லுபடியற்றதும் சட்டவிரோதமானதும்" எனப் பிரகடனப் படுத்தியது.

இது இந்தப் பிரதேசத்தைச் சார்ந்த தமிழ்பேசும் மக்களுக்கு ஓர் அரசியல் பின்னடைவாகும்.

13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கையின் அரசியல் அமைப்பில் உள்வாங்கப்பட்டு 35 வருடங்கள் கடந்துவிட்டன இந்த இடைப்பட்ட காலத்தில், இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நடைபெற்று, அது 2009 ஆம் ஆண்டு முடிவுற்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ் பேசும் மக்கள் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு முறையே எமக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய வாழ்வை உறுதிப்படுத்தக் கூடிய நிலைபேறான ஒரே முறைமை என்று திடமாக நம்புகிறோம்.

அந்தவகையில் தங்களுக்கு நல்வரவு கூறுவதுடன் இலங்கைக்கான தங்களின் உத்தியோகபூர்வ வருகையை நாம் கௌரவிப்பதுடன், இலங்கையில் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை ஏற்படுத்த தங்களின் பெறுமதிமிக்க ஒத்துழைப்பை வழங்குமாறு இந்த பகிரங்க வேண்டுகோளை முன்வைக்கிறோம் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8-33)



பூநகரி பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட மன்றங்களுக்கு இடையிலான நடனப்போட்டியில் சரவணபொய்கை நுண்கலைக் கூடம் பிரிவு 01 கிராமிய நடனத்தில் முதல் இடம் பெற்றுள்ளது.

## மாம்பழ மாளிகை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மாபெரும் மாம்பழ மாளிகை திறப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (நி-8)


## கதிர்காமு சோதிலிங்கம் ஆசிரியரின்
# மணிவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

கதிர்காமு சோதிலிங்கம் ஆசிரியரின் மணிவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம், மிருசுவில் Mango mansion hotel இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையினைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் செ.குணபாலன் வழங்கவுள்ளார். வாழ்த்துரைகளினை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் பா.நிமலதாசன், வவுனியா பல்கலைக்கழக வியாபாரக் கற்கைப் பீட பீடாதிபதி பேராசிரியர் யோ.நந்தகோபன், கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை வைத்திய கலாநிதி மாசிலாமணி குகராசா, யாழ்.பல்கலைக்கழக வணிகபீடம், முகாமைத்துவக் கற்கைகள் ஓய்வு நிலைப் பேராசிரியர்களான மா.நடராஜ சுந்தரம் மற்றும் க.தேவராசா, யாழ்.பல்கைழக வணிகபீடம், முகாமைத்துவக் கற்கைகள் ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரட்ணம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (நி-8)

## 'வெள்ளியில் ஞாயிறு'
## வியாழக்கிழமை ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஆற்றுகையான திருப்பாடுகளின் நாடகம் இவ்வாண்டு "வெள்ளியில் ஞாயிறு" என்னும் பெயரில் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

"வெள்ளியில் ஞாயிறு" திருப்பாடுகளின் நாடகம் முதன் முதலாக 2010 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2018 ஆண்டிலும் மேடையேற்றப்பட்டது.

தற்போது மூன்றாவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரின் எழுத்துரு, நெறியாள்கையில் தயாராகும் "வெள்ளியில் ஞாயிறு" துயரமும் சிலுவைகளும் இல்லாது வெற்றியும் மகிழ்ச்சியும் இல்லை. நல்லனவற்றுக்கான மானிடத்தின் துயரங்களும் பிரயத்தனங்களும் தான் வெற்றியைத் தருகின்றன என்ற கருப்பொருளினை மையமாகக் கொண்டுள்ளது. வழமை போலவே பிரமாண்டமான அரங்கஅமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களின் பங்கேற்புடன் அரங்கேறத் தயாராகின்றது வெள்ளியில் ஞாயிறு. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் குடியியல் நடவடிக்கைக் கோவை பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

வழ.இல: நம்பிக்கைச்சொத்து /49/2025
தன்மை: நம்பிக்கைச்சொத்து

***நம்பிக்கைப்பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 112 இன் கீழான விண்ணப்பம்***

**நவரத்தினம் ஜெயகுமாரன்**
நம்பிக்கைப் பொறுப்பாளர், கைதடி மத்தி அத்திபுலம் மூர்த்தியாவத்தை மடத்துக் கந்தசாமியார் கோவில், கலாநிதி பவனம், சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி

**-மனுதாரர்-**

எதிர்

1. **மாணிக்கம் தங்கராசா**
   தலைவர்
   கைதடி மத்தி அத்திபுலம் மூர்த்தி யாவத்தை மடத்துக் கந்தசாமியார் கோவில் பரிபாலனசபை கைதடி தென்கிழக்கு, கைதடி
2. **கோணேஸ்வரன் கோகிலரோகினி**
   செயலாளர்
   கைதடி மத்தி அத்திபுலம் மூர்த்தியாவத்தை மடத்துக் கந்தசாமியார் கோவில் பரிபாலனசபை. குமரநகர், கைதடி
3. **சிவானந்தன் சிவாதரி**
   பொருளாளர்
   கைதடி மத்தி அத்திபுலம் மூர்த்தியாவத்தை மடத்துக் கந்தசாமியார் கோவில் பரிபாலன சபை கைதடி வடக்கு, கைதடி
4. **ஆறுமுகம் பூபாலரஞ்சன்**
   உபதலைவர்
   கைதடி மத்தி அத்திபுலம் மூர்த்தியாவத்தை மடத்துக் கந்தசாமியார் கோவில் பரிபாலன சபை கைதடி கிழக்கு, கைதடி
5. **சுப்பிரமணியம் பிரகலாதன்**
   உபசெயலாளர்
   கைதடி மத்தி அத்திபுலம் மூர்த்தியாவத்தை மடத்துக் கந்தசாமியார் கோவில் பரிபாலன சபை குமரநகர், கைதடி,
6. **கிருஸ்ணமூர்த்தி சிவலோஜினி**
   கைதடி மத்தி, கைதடி
7. **சின்னத்தம்பி பவளகுமாரன்**
   கைதடி கிழக்கு, கைதடி
8. **கந்தையா சர்வேஸ்வரன்**
   குமரநகர், கைதடி
9. **லோகநாதன் சிவச்செல்வன்**
   கைதடி கிழக்கு, கைதடி
10. **கதிர்காமன் சிவபாதம்**
    குமரநகர், கைதடி
11. **செல்லையா ரங்கநாதன்**
    கைதடி மத்தி, கைதடி
12. **மயில்வாகனம் சுரேசன்**
    கைதடி மத்தி, கைதடி
13. **சின்னத்துரை கமலன்**
    குமரநகர், கைதடி
14. **நாகராசா துவாரகன்**
    கைதடி கிழக்கு, கைதடி
15. **சுந்தரம் விக்கினேஸ்வரன்**
    குமரநகர், கைதடி

**-எதிர்மனுதாரர்கள்**

மேற்படி இலக்க வழக்கின் மனுதாரரால் பின்வரும் ஆதன அட்டவணைகளில் நன்கு விபரிக்கப்படும் ஆதனாங்களும் அதில் அமைந்திருக்கும் கைதடி மத்தி அத்திபுலம் மூர்த்தியாவத்தை மடத்துக் கந்தசாமியார் ஆலயமும் மனுதாரரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற உரித்தாக்கற் கட்டளைக்கும் (vesting order) தீர்ப்பிற்கும் கோரி இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதலாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி நாவற்குளி கோயிற்பற்று, கைதடியிறை, **"ஆவரைப்பள்ளம்"** ஏக்கர் ஆறு றூட் ஒன்று பேரச்சஸ் பதினெட்டு
இதற்கு எல்லைகள்
**கிழக்கும் தெற்கும்:** முடிக்குரிய நிலம்,
**வடக்கு:** ஒழுங்கை
**மேற்கு:** முடிக்குரிய நிலமும் சடையர் தாமோதரருடைய ஆதனமும்
இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், கிணறும், பயிரடாங்கலிற் சொரியனாக 1/4 பங்கும்

**இரண்டாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி நாவற்குளி கோயிற்பற்று, சாவகச்சேரி பிரதேசசபை தென்மராட்சி பிரதேச செயலகம் கைதடி மத்தி (J/290) கிராம்சேவகர் பிரிவு கைதடி இறை **"அத்திநின்ற செம்பாடுபுலம் தோட்டம்"** நிலப்பரப்பு இரண்டொடு பதினாறில் ஒன்பது (நில.பர: 2 - 9/16)
இதற்கு எல்லை
**கிழக்கு :** சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோயிலுக்கு உரிய ஆதனம்
**வடக்கு :** சுப்பிரமணியம் காசிப்பிள்ளையின் பின்னுரித்தாளருக்கு உரிய ஆதனம்
**மேற்கு :** சடையர் தாமோதரருக்கு உரிய ஆதனம்
**தெற்கு :** காசிப்பிள்ளை குணரத்தினத்தின் பின்னுரித்தாளருக்கு உரிய ஆதனம்
இதடங்கலில் சொரியலாய் ஆறில் ஐந்து (5/6) பங்கும் தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற் றிலும் அதற்குச் சேர்ந்தவைகளிலும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்

**மூன்றாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி நாவற்குளி கோயிற்பற்று, சாவகச்சேரி பிரதேசசபை தென்மராட்சி பிரதேச செயலகம் **கைதடி மத்தி** (J/290) கிராமசேவகர் பிரிவு கைதடி இறை **"அத்தி நின்ற செம்பாடுபுலம் தோட்டம்"** நிலப்பரப்பு ஏழொடு பதினாறில் பதினொன்று (நில.பர:7 11/16)
இதற்கு எல்லை
**கிழக்கு :** குறித்த கோயிலுக்கு உரிய ஆதனம், **வடக்கு :** குறித்த கோயில் அமைந்திருக்கும் ஆதனம் **மேற்கு :** றோட்டு **தெற்கு:** குணரத்தினம் கனகரத்தினத் துக்கும் சகோதரிக்கும் உரிய ஆதனம்
இவ்வெல்லை நிமைடங்கலும், தெற்கெல்லைக்காணிக்குள் இருக்கும் கிணற்றிலும் அதைச் சேர்ந்தவைகள் அனைத்திற்கும் இதற்குரிய பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

**நான்காம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி நாவற்குளி கோயிற்பற்று, சாவகச்சேரி பிரதேசசபை தென்மராட்சி பிரதேச செயலகம் **கைதடி மத்தி** (J/290) கிராமசேவகர் பிரிவு கைதடி இறை **"கயட்டைசிட்டிப்புலம்"** நிலப்பரப்பு ஒன்பது (நில.பர:9) இதற்கு எல்லை
**கிழக்கு :** றோட்டு, **தெற்கு :** ஒழுங்கை
**வடக்கும் மேற்கும் :** தாமோதர முத்துத்தம்பிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் 1/3 அதாவது முழுவதில் சொரியலாய் மூன்றிலொரு பங்கும் இதற்கு வடமேற்கே சிதம்பரநாதர் வேலாயுதருடைய காணிக்குள்ள கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

**ஐந்தாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி நாவற்குளி கோயிற்பற்று, சாவகச்சேரி பிரதேசசபை தென்மராட்சி பிரதேசசெயலகம் **கைதடி மத்தி** (J/290) கிராமசேவகர் பிரிவு கைதடி இறை
**"கயட்டைசிட்டிப்புலம்"** நிலப்பரப்பு ஒன்பது (நில.பர:9) **இதற்கு எல்லை**
**கிழக்கு :** றோட்டு, **தெற்கு :**ஒழுங்கை
**வடக்கும் மேற்கும்:** தாமோதரர் முத்துத்தம்பிக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் 1/4 அதாவது முழுவதில் சொரியலாய் நாலிலொரு பங்கும் இதற்கு வடமேற்கே வேலாயுதர் கந்தையாவுடைய காணிக்குள் இருக்கும் கிணற்றிலும் அதற்குரியவைகளிலும் இதற்குரிய பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்

**ஆறாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி நாவற்குளி கோயிற்பற்று, நாவற்குளி இறை, **"வெண்ணையன் வயல்"** இரண்டு பிரிவுகளுக்கும் கூடிய நெற்பரப்பு 98 (தொண்ணூற்றெட்டு)
இதற்கு எல்லைகள்
**கிழக்கு :** கோவிந்தர் பெண் கதிராசிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், **வடக்கு :** களி நிலம் **மேற்கு :** வாய்க்கால், **தெற்கு:** வயிரவன் சுப்பனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்
இதனடங்கலிற் சொரியலாய் மூன்றில் ஒரு (1/3) பங்கும்

**ஏழாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி நாவற்குளி கோயிற்பற்று, சாவகச்சேரி பிரதேசசபை தென்மராட்சி பிரதேச செயலகம் **கைதடி மத்தி** (J/290) கிராமசேவகர் பிரிவு கைதடி இறை **"அத்தி நின்ற செம்பாடுபுலம் தோட்டம்"** நிலப்பரப்பு ஆறு (நில.பர:6) இதற்கு எல்லை
**கிழக்கு :** அப்பாத்துரை செல்வரத்தினத்துக்கு உரிய ஆதனம்
**வடக்கு :** தம்பாபிள்ளை செல்லத்துரைக்கு உரிய ஆதனம்
**மேற்கு :** இக்கோயிலுக்கு உரிய ஆதனம்
**தெற்கு :** செல்லப்பா சுப்பிரமணியத்துக்கு உரிய ஆதனம்
இதடங்கலும், இக்காணிக்கு கிழக்கே சேனாதிராசா பெண் குகஞானாம்பிகையின் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப்பங்கும் இதைச் சேர்ந்த நிலம் ஆடுகால் துலா பேண் முதலிய சேர்மானங்களில் இதற்குரிய பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்

**எட்டாம் ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், தென்மராட்சிப்பகுதி, தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு. சாவகச்சேரி பிரதேசசபைப் பகுதி, நாவற்குளி கோயிற்பற்று, கைதடியிறை கைதடி தென்கிழக்கு கிராம அலுவலர் (J/292) பிரிவு **"அத்திநின்ற செம்பாடுபுலம் தோட்டம்"** நில.பர: 33 7/8 இதில் மேற்குப் பக்கமாக நில.பர.15 குளி 12.9 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எஸ். சுப்பிரமணியமவர்களால் வரையப்பெற்ற 486ஆம் இலக்கமும் 2004.08.04 ஆந் திகதியுங் கொண்ட அளவைப்படத்தில் எட்டுத் துண்டுகளாக பகுக்கப்பட்டுள்ளது. இவற்றில் துண்டு 7 எனச் சுட்டப்பட்டுள்ள பாகத்தின் பரப்பளவு நி.பர.1 குளி நாலு தசம் ஐந்துக்கும் எல்லைகள்
**கிழக்கும் வடக்கும் :** குறித்த நிலஅளவைப்படத்தில் துண் 8 எனச்சுட்டப்பட்டுள்ளதும் முருகேசன் சண்முகலிங்கத்துக்கும் பெண் சந்திரமலருக்குமுரியதுமான ஆதனம்.
**மேற்கு :** கைதடி வடக்கு றோட்டு
**தெற்கு :** அத்திப்புலம் மூர்த்தியாவத்தை கந்தசுவாமி கோவிலுக்குமுரிய ஆதனம் இதடங்கலும்

ஏனவே மேற்படி கோரப்பட்ட நிவாரணங்கள் தொடர்பில் குறித்த விடயத்தில் அக்கறையுள்ள நபர் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 16 இன் கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ் வழக்கானது எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு 04ஆம் மாதம் 28 ஆம் நாளன்று மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளையின் படி

**ஒப்பமிடப்பட்டுள்ளது,**
**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்,**
**சாவகச்சேரி.**

24.03.2025

(3837)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## சொகுசு கப்பலில் பரவிய 'நோரோ' வைரஸ் தொற்று

### 250 சுற்றுலாப் பயணிகள் பாதிப்பு

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டின் பிரபல சுற்றுலா நிறுவனங்களில் ஒன்றாக குனார்ட் உள்ளது. இந்த நிறுவனம் சார்பில் இயக்கப்படும் சொகுசு கப்பல்களில் குயின் மேரி 2 ஒன்றாகும். இந்த இராட்சத சொகுசு கப்பலில் அதிநவீன சொகுசு அறைகள், பிரமாண்ட நீச்சல் குளம், திரையரங்கம், நூலகம், கேசினோ உள்ளிட்ட சகல வசதிகளும் அமைக்க பெற்றுள்ளது.

உலகில் உள்ள சொகுசு கப்பல்களில் மிகவும் ஆடம்பரமான சொகுசுக் கப்பல் என குயின் மேரி 2 வர்ணிக்கப்படுகிறது. மேலும் இதனை மிதக்கும் சொர்க்கம் என சொல்லும் அளவுக்கு மிகவும் புகழ் பெற்றதாக விளங்குகிறது.

இந்த சொகுசுக் கப்பல், கரீபியன் தீவு நாடுகளில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க் வழியாக இங்கிலாந்தின் சவுத்ஹாம்டன் நகருக்கு இயக்கப்பட்டது. இந்தக் கப்பலில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள், கப்பல் கப்டன் உட்பட 1,200 இற்கும் மேற்பட்ட சிப்பந்திகள் பயணித்தனர்.

அட்லாண்டிக் பெருங்கடல் வழியாக அந்த சொகுசுக்கப்பல் சென்று கொண்டிருந்த போது திடீரென கப்பலில் இருந்த பலருக்கு "நோரோ" என்னும் வைரஸ் நோய் பாதிப்பு ஏற்பட்டது.

இந்தத் தொற்று பாதிப்பால் பயணிகளுக்கு வாந்தி மற்றும் கடுமையான வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ள தகவலின்படி சொகுசு கப்பலில் உள்ள 250 சுற்றுலாப் பயணிகளுக்கும் 20 சிப்பந்திகளுக்கும் இந்த நோரோ வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் எளிதில் பரவக்கூடியது என்பதும், மருத்துவ சிகிச்சை எடுத்து கொள்ளாதபட்சத்தில் உயிரிழப்பு ஏற்படும் அபாயமும் உண்டு என தெரிவித்துள்ளனர். தொற்றுப் பாதிப்பு ஏற்பட்டுள்ளவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு கப்பல் முழுவதும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## ட்ரம்பின் அறிவிப்பால் எண்ணெய் விலை சரிவு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புதிய வரிகளை கடுமையாக்குவதாக அறிவித்ததைத் தொடர்ந்து, நேற்று வியாழக் கிழமை சர்வதேச சந்தையில் எண்ணெய் விலைகள் 3% வரை சரிந்தன.

இது முதலீட்டாளர்கள் உலகளாவிய வர்த்தகப் போரை ஏற்படுத்தும் என்றும், இது பொருளாதார வளர்ச்சியைக் குறைக்கும் மற்றும் எரிபொருள் தேவையை மட்டுப்படுத்தும் என்றும் கவலைப்படுகிறார்கள்.

பிரெண்ட் மசகு எண்ணெய் (BCO) $73 இற்கும் கீழே சரிந்தது. அதே நேரத்தில், அமெரிக்க மேற்கு டெக்சாஸ் இடைநிலை மசகு எண்ணெய் (WTI) $70 இற்கும் கீழே சரிந்தது.

மார்ச் 5 ஆம் திகதிக்குப் பின்னர், பிரெண்ட் மசகு எண்ணெய் விலை $1.82 அல்லது 2.43% குறைந்து, ஒரு பீப்பாய்க்கு 73.13 அமெரிக்க டொலர்களாக இருந்தது.

அமெரிக்க மேற்கு டெக்சாஸ் இடைநிலை மசகு எண்ணெய் $1.84 அல்லது 2.57% குறைந்து, ஒரு பீப்பாய்க்கு $69.87 ஆக இருந்தது.

உலகின் மிகப்பெரிய எண்ணெய் நுகர்வோரான அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் பெரும்பாலான பொருட்களுக்கு 10% குறைந்தபட்ச வரியை ட்ரம்ப் புதன் கிழமை அறிவித்தார்.

பல நாடுகளின் பொருட்களுக்கு மிக அதிக வரிகளுடன், பணவீக்கத்தை அதிகரித்து அமெரிக்க மற்றும் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியைத் தடுக்க அச்சுறுத்தும் உலகளாவிய வர்த்தகப் போரை அதிக அளவில் தொடங்கியுள்ளார். (நி-8)

# வர்த்தகப் ...

# ஆரம்பித்த...



### கொந்தளி...

(வோஷிங்டன்) —

அமெரிக்காவிற்கு ...

பொருட்களுக்கு 10% ...

நேற்று முன்தினம் அ...

பொருட்களுக்கு மிக ...

அமெரிக்க மற்றும் உ...

அச்சுறுத்தலான உ...

தொடங்கியுள்ளார்.

எதிர்பாராத விதமாக அதிக வரி விகிதங்களுடன் தங்களை இணைத்துக் கொண்ட பல நீண்டகால அமெரிக்க நட்பு நாடுகளிடமிருந்து குழப்பமான கண்டனத்தைப் பெற்ற இந்த கடுமையான வரிகள், உலகின் மிகப்பெரிய நுகர்வோர் பொருளாதாரத்தைச் சுற்றி புதிய தடைகளை எழுப்புவதாக உறுதியளிக்கின்றன.

இது உலகளாவிய ஒழுங்கை வடிவமைத்த பல தசாப்த கால வர்த்தகத் தாராளமயமாக்கலை மாற்றியமைக்கிறது.

இதனால், வர்த்தக பங்காளிகள் தாங்களாகவே எதிர் நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது துவிச்சக்கர வண்டிகள் முதல் வைன் வரை அனைத்திற்கும் வியத்தகு முறையில் அதிக விலைகளுக்கு வழிவகுக்கும்.

இந்த வரி விதிப்பினை விமர்சித்துள்ள அமெரிக்க திறைசேரியின் தலைவர் ஸ்காட் பெசென்ட், ஏனைய நாடுகளை பழிவாங்க வேண்டாம் என்று வலியுறுத்தினார்.

அதே நேரத்தில், அதிகரித்து வரும் வர்த்தகப் போர் குறித்த நிச்சயமற்ற தன்மையால் பல வாரங்களாக நிலையற்ற வர்த்தகத் ...

## கட்டாரிடமிருந்து பணம் ...

## நெதன்யாகுவின் நெருங்கிய ச...

(ஜெருசலேம்)

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் சகாக்களிற்கு கட்டார் அதிகாரிகளுடன் தொடர்புகள் உள்ளமை தெரியவந்தது, இஸ்ரேல் அரசியலில் பெரும் சர்ச்சை மூண்டுள்ளது.

கட்டார் குறித்து இஸ்ரேலில் சிறந்த அபிப்பிராயத்தை உருவாக்குவதற்காக கட்டாரிடமிருந்து பணம் பெற்றதாக பெஞ்சமின் நெதன்யாகுவின் இரண்டு நெருங்கிய சகாக்கள் தெரிவித்துள்ளனர். பொலிஸ் விசாரணையின் போதே அவர்கள் இதனை தெரிவித்துள்ளனர்.




கட்டார் ஹமாசிற்கு முழுமையான ஆதரவை வழங்குகின்ற நாடு ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப் போரை ........ தார் ட்ரம்ப்!

## தளித்த உலகத் தலைவர்கள்

ன்) —

**ாவிற்கு இறக்குமதி செய்யப்படும் பெரும்பாலான த 10% குறைந்தபட்ச வரியை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தினம் அறிவித்தார். இதன் மூலம் அவர், பல நாடுகளின் கு மிக அதிக வரிகளுடன், பணவீக்கத்தை அதிகரித்து றும் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும் ான உலகளாவிய வர்த்தகப் போரை அதிக அளவில் ளார்.**

அதிக
மர்சித்
ரியின்
ணைய
ன்டாம்
ரித்து
றித்த
பல
த்தகத்

தைத் தொடர்ந்து அமெரிக்க மற்றும் ஐரோப்பிய பங்குச் சந்தைகள் கடுமையாக சரிந்தன.

20% வரியை எதிர்கொள்ளும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் 24% வரிக்கு இலக்காகக் கொண்ட ஜப்பான் உட்பட அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடுகளும் இதில் இருந்து தப்பவில்லை.

வெள்ளை மாளிகையின் தகவலின்படி, தாமிரம், மருந்துகள், குறைக்கடத்திகள், மரங்கள், தங்கம் மற்றும் அமெரிக்காவில் கிடைக்காத சில கனிமங்கள் உள்ளிட்ட சில பொருட்களுக்கு பரஸ்பர வரிகள் பொருந்தாது.

எவ்வாறெனினும், ட்ரம்பின் இந்த வரித் தொகை, கடந்த நூற்றாண்டின் நடுப் பகுதியில் இருந்து நடைமுறையில் உள்ள வர்த்தக ஏற்பாடுகளை நம்பியிருந்த நிதிச் சந்தைகள் மற்றும் வணிகங்களை உலுக்கியுள்ளது.

இந்த வரி விதிப்புகளுக்கு உலக நாடுகளின் தலைவர்கள் சிலர் கடுமையாக எதிர்வினையாற்றியுள்ளனர். சிலர் அமெரிக்காவுடன் ஓர் ஒப்பந்தத்தை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (நி-8)

# னம் பெற்ற
# ய சகாக்கள்

மை
நாடு

என இஸ்ரேலில் பலர் கருதுவதாலும், இஸ்ரேலிற்கும் கட்டாருக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் இல்லை என்பதாலும், இந்த விவகாரம் இஸ்ரேலில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கட்டார் இஸ்ரேலின் அரசியலின் உயர்பீடம் வரை தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதும் இஸ்ரேலில் பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஹமாஸ் இஸ்ரேல் பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தம் வகிக்கும் பிரதான நாடான கட்டார் தான் ஹமாசிற்கு ஆதரவளிப்பதாக தெரிவிக்கப்படுவதை நிராகரித்துள்ளது.

இதுவரை இந்த விவகாரத்தில் இஸ்ரேலிய பொலிஸார் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தேகநபராக சேர்க்கவில்லை.

இந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என தெரிவித்துள்ள அவர் தனது ஆட்சியை கவிழ்ப்பதற்கான சதி இதுவென தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலியப் பிரதமர் எதிர்கொண்டுள்ள புதிய குற்றச்சாட்டுகள் இவை என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலியப் பிரதமரின் இரண்டு நெருங்கிய சகாக்களான ஜோனட்டன் உரிச், முன்னாள் பேச்சாளர் எலி பெல்ட்ஸ்டெய்ன் இருவரும் இஸ்ரேலில் கட்டார் குறித்து நல்ல அபிப்பிராயத்தை உருவாக்குவதற்காக, பொது மக்கள் தொடர்பாடல் நிறுவனமொன்றை நடத்துவதற்காக பணம் பெற்றுள்ளனர்.

கட்டார் ஹமாசின் சார்பில் யுத்தநிறுத்தப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள ஒரு சூழ்நிலையிலேயே இது இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் மூலமே இதற்கான நிதி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த அந்த நபரும் ஜோனட்டன் உரிச் என்பவரும், கட்டார் குறித்து சிறந்த அபிப்பிராயத்தை உருவாக்குவதற்காகவும் எகிப்து குறித்து எதிர்மறையான அபிப்பிராயத்தை உருவாக்குவதற்காகவும் வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்தினார்கள் என நீதிமன்ற ஆவணம் தெரிவித்துள்ளது. (நி-8)

**மியன்மார் நிலநடுக்கம்**

# மூவாயிரத்தைக் கடந்தது பலி எண்ணிக்கை



(பாங்கொக்)

மியன்மார் நாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.7 ஆக பதிவான இந்தப் பயங்கர நிலநடுக்கம் தலைநகர் நேபிடாவ், மண்டலே ஆகிய நகரங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இதேபோல், மியன்மாரின் அண்டை நாடான தாய்லாந்திலும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கம் கடும் சேதங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில் மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன.

மியன்மாரில் இடிந்து விழுந்த கட்டடங்களுக்குள் இருந்து குவியல் குவியலாக உடல்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், மியன்மார் நிலநடுக்கத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 3,003 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 4500 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேபோல், தாய்லாந்தில் நிலநடுக்கத்தில் மாயமான 100 இற்கும் அதிகமானோரை தேடும் பணிகள் நடந்து வருகின்றன.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து மீட்புப்பணிகள் நடைபெற்று வருகிறது. (நி-8)

# காசா மீது இஸ்ரேல் தாக்குதல் 80 பேர் உயிரிழப்பு



(இஸ்ரேல்)

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் சிறுவர்கள் உள்ளிட்ட 80 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் நேற்று இரவு முழுவதும் தொடர்ந்து வரும் நிலையில் இவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், காசாப் பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையினால் நடத்தப்பட்டு வரும் வைத்தியசாலை மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

எவ்வித முன்னறிவிப்புகளும் இன்றி இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே காசா மீதான இஸ்ரேலின் இதுவரையான தாக்குதல்களில் 50,423 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 114,638 பேர் காயமடைந்துள்ளதாகவும் காசாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஓட்டிசத்தால் பாதிக்கப்படும் பிள்ளைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் வைத்தியசாலையின் விசேட் வைத்தியர் ஸ்வர்ணா விஜேதுங்க தெரி வித்துள்ளார்.

ஓட்டிசம் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"2009 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் இலங்கையில் 93 குழந்தைகளில் ஒருவருக்கு இந்த நிலை இருந்தது. அதன் பிறகு, அது தொடர்பான கணக்கெடுப்பு முறையாகச் செய்யப்படவில்லை. இப்போது ஓட்டிசத்தால் பாதிக்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கையில் வளர்ச்சி தொடங்கியுள்ளது.

ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை உலகில் அதிகரித்து வரும் போக்கு உள்ளதுடன், இலங்கையிலும் அந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக நாங்கள் உணர்கிறோம்.

அதை மிக விரைவாக அடையாளம் காண்பது முக்கியமாகும். ஆரம்ப கட்டத்திலேயே அடையாளம் காண முடிந்தால், 90வீதமானவர்களை இரண்டரை முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் சரிப்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# பீடி விலை அதிகரிப்பு

(கொழும்பு)

அனைத்து பீடி உற்பத்தி பொருட்களுக்கான புகையிலை வரி நேற்று முன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இரண்டு ரூபாயிலிருந்து மூன்று ரூபாயாக இந்த வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒரு பீடியின் விலை ஒரு ரூபாயால் அதிகரிக் கப்பட்டுள்ளது. (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 500 | 350 | 600 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 600 | 600 |
| தக்காளி | 250 | 250 | 250 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 220 | 200 |
| கோவா | 250 | 350 | 350 | 300 |
| கரட் | 550 | 500-700 | 700 | 800 |
| பூசணி | 200 | 200 | 160 | 200 |
| புடோல் | 250 | 250 | 250 | 300 |
| வாழைக்காய் | 150 | 100 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 190 | 250 | 180 |
| பாகற்காய் | 450 | 500 | 500 | 500 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 280 | 250 | 300 |
| பயற்றங்காய் | 300 | 400 | 250 | 400 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 280 |
| பீற்றூட் | 350 | 250 | 250 | 400 |
| கறிமிளகாய் | 800 | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 2000 | 2500 | 2000 | 2500 |
| போஞ்சி | 600 | 550 | 550 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 400 | 200 | 550 |
| கீரை – 1 பிடி | 140 | 100-120 | 150 | 150 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 160-200 | 200-250 |
| இராசவள்ளி | 650 | 400 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 200 | 500 |
| முள்ளங்கி | 140 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 60 |
| வல்லாரை | 60 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 200 |

## இன்று ஒரு தகவல் 350



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அறிவுள்ள கருணை

இந்த உலகத்தில் கருணை காட்ட வேண்டியது அவசியம்தான். ஆனால் எல்லோரிடமும் கருணை காட்டிக் கொண்டு இருக்க முடியாது. அப்படி காட்டிக் கொண்டிருந்தால் நம் பாடு ஆபத்து. ஒரு வெறி நாய் உங்களைக் கடிக்க வருகிறது. ஐயோ பாவம். நாய் தானே கடித்து விட்டுப் போகட்டும் என்று காலைக் கொடுப்பீர்களா? அறிவு வேலை செய்ய வேண்டும். அதன் பின்பு தான் கருணை காட்டுவதா? வேண்டாமா என முடிவு செய்ய வேண்டும்.

ஒரு பெரியவர் வெளியூர் போய் வீட்டிற்கு வேண்டிய பொருட்களையெல்லாம் வாங்கிக் கொண்டு வந்தார். வீட்டிற்குத் திரும்பி வரும் வழியில் இருட்டிப் போய் விட்டது. ஒரு அடர்ந்த காட்டு வழியாக தலையிலே ஒரு மூட்டையுடன் நடந்து வந்து கொண்டு இருந்தார். புதர் மறைவிலே இருந்த புலி ஒன்று இவரைப் பார்த்து விட்டது. உடனே இவர் மேலே பாய்வதற்காக ஓடி வந்தது. பெரியவர் பார்த்தார் என்ன செய்வது என்று ஒன்றும் புரியவில்லை. உடனே ஒரு மரத்திற்குப் பின் பக்கமாகச் சென்று மறைந்து விட்டார்.

அந்தப் புலி ஓடிப் போய் மரத்திற்கு முன் பக்கமாகப் போய் நின்றது. அந்தப் பக்கம் அவர் இந்தப் பக்கம் புலி. நடுவிலே மரம். புலி நிமிர்ந்து நின்று முன்னாங்கால் இரண்டையும் மரத்திற்கு இரண்டு பக்கமாகவும் நீட்டியது அந்தப் பக்கம் நின்ற பெரியவர் அந்த இரண்டு முன்னாங்கால்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். நடுவிலே மரம். அந்தப் பெரியவரும் புலியும் மரத்தைச் சுற்றிச் சுற்றி வருகின்றார்கள். பெரியவர் பிடிச்ச பிடியை விடவே இல்லை.விட்டு விட்டால் புலி கிட்ட வந்துவிடுமே. என்ன செய்வது . அதனாலே சுற்றிச் சுற்றி வந்து கொண்டு இருந்தார். கைகளெல்லாம் வலிக்க ஆரம்பித்தது. எப்படித் தப்பிப்பது என்று ஒன்றுமே புரியவில்லை.

அந்த நேரம் பார்த்து அந்த வழியாக ஒரு ஆள் வந்தார். அவன் கையிலே ஒரு துப்பாக்கி இருந்தது. இப்போது தான் எல்லோரது கையிலேயும் துப்பாக்கி இருக்கிறதே. துப்பாக்கியோடு அந்த ஆள் வருவதைப் பார்த்து நம்ம பெரியவர் மிகவும் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார். இனிமேல் எப்படியும் பிழைத்துக் கொள்ளலாம் என்கின்ற தைரியம் அவருக்கு. சீக்கிரமாக இங்கே வாருங்கள் என்று இவர் அந்த மனிதரைப் பார்த்துக் கூப்பிட்டார். அவரும் கிட்ட வந்தார். இதோ பாருப்பா இந்தப் புலியை உனது துப்பாக்கியாலே சுட்டு விடு என்றார். அதற்கு அந்த ஆள் ஜீவகாருண்யம் பேச ஆரம்பித்து விட்டான். பெரியவரே நீயும் ஓர் உயிர். புலியும் ஓர் உயிர். ஜீவகாருண்யம் காட்டுறவன் நான். அதாலே நான் புலியைச் சுட மாட்டேன் என்று சொல்லி விட்டார்.

அப்படி இல்லை. புலி ஒரு மிருகம். நான் மனிதன். புலி பல பேரைக் கொல்லக் கூடிய ஒரு பிராணி. நான் பல பேருக்கு உதவி செய்யக் கூடிய ஒரு மனிதன். என்னை நம்பி வீட்டிலே மனைவி பிள்ளைகளெல்லாம் காத்துக் கொண்டு இருக்கிறர்கள். அதனாலே இந்தப் புலியைக் கொன்று விடு. ஆறறிவு படைத்த மனிதனும் மிருகமும் ஒன்றா? எது உயர்வு எது தாழ்வு என்று பகுத்தறிவினாலே பார்க்க வேண்டாமா? ஆபத்து வேளையிலே நீ எனக்கு உதவி செய். அது தான் நியாயம் என்றார். அதெல்லாம் முடியாதுங்க நான் அற நெறியை விட்டு விலக மாட்டேன்.. புலிக்கும் உயிர் வாழும் ஆசை உண்டு. அதனால் ஒரு உயிருக்காக இன்னொரு உயிரைக் கொல்ல மாட்டேன் என்றார்.

பெரியவர் யோசித்தார். சரி புலியைக் கொல்ல வேண்டாம். எனக்காக ஒரு உதவியாவது செய் என்றார். அது வேணும் என்றால் செய்கின்றேன் என்ன வேண்டும் என்று சொல்லுங்கள் என்றான். எனக்கு தாகமாக இருக்கிறது. எனக்கு தண்ணீர் குடிக்க வேண்டும் போல இருக்கிறது. அதனாலே கொஞ்ச நேரம் எனக்குப் பதிலாக இந்தப் புலியினுடைய காலைப் பிடித்துக் கொண்டு இரு. நான் சென்று தண்ணீர் குடித்துவிட்டு வருகின்றேன் என்றார். சரி என்று இவனும் பிடித்துக் கொண்டான்.பெரியவர் சென்று வந்தார். வந்து மூட்டையைத் தூக்கி தலையிலே வைத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்துவிட்டார். இந்த ஆளுக்கு திடுக் என்று ஆகிவிட்டது. என்னாங்க என்னை மாட்டி விட்டு இப்படி நடையைக் கட்டுகிறீர்கள் இது நியாயமா என்று கேட்டான். எனக்குக் கொஞ்ச வேலை இருக்கிறது அற்றையெல்லாம் முடித்து விட்டு வந்து விடுகின்றேன் என்று சொல்லி விட்டு இவர் நடக்க ஆரம்பித்து விட்டார். இவன் பரிதாபமாக கெஞ்சினான்.

ஐயா மனைவி பிள்ளைகளெல்லாம் எனக்காக வீட்டிலே காத்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்தத் துப்பாக்கியை எடுத்து அந்தப் புலியைச் சுட்டுவிடுங்கள் என்று சொன்னான். பெரியவர் பார்த்தார் இப்பதான் நியாயம் எது என்பது புரிந்திருக்கிறது. புலியை விட நீ உயர்ந்தவன். நீ வாழ்ந்தால் எத்தனை பேருக்கு உதவியாக இருப்பாய். அது வாழ்ந்தால் பல பேருக்கு கெடுதல் செய்யும். அதனால் நீ தான் வாழ வேண்டும். ஆனால் எனக்கு சுடத்தெரியாது. அதனாலே முன்னாங்காலைப் பிடித்துக் கொள்கின்றேன். நீ புலியைச் சுடு என்றார். உடனே அந்தப் பெரியவர் மூட்டையை கீழே வைத்து விட்டு புலியைப் பிடித்துக் கொண்டார்.

அந்த ஆள் அந்த மிருகத்தைக் கொன்றான். மனிதனைக் காப்பாற்றினான். இது தான் அறிவுள்ள கருனை என்பது. அறிவைப் பயன்படுத்தாமல் கருனை காட்டினால் அது ஆபத்திலே தான் போய் முடியும். நம்ம ஆட்கள் கருணை காட்டுவதிலே எத்தனையோ ரகம் இருக்கிறது. அதற்கு ஒரு உதாரணம் சொல்கின்றேன் கேளுங்கள். ஒரு ஆள் குளத்திலே விழுந்து விட்டான். நீச்சல் தெரியாது. தத்தளித்துக் கொண்டிருந்தான். இன்னொரு ஆள் அதைப் பார்த்து கருணை கொண்டான். உடனே தண்ணீரிலே குதித்து அவனைக் கரைக்கு இழுத்துக் கொண்டு வந்தான். என்னைக் காப்பாற்றியதற்கு மிகவும் நன்றி. உங்களின் ஜீவகாருண்யத்தைப் பாராட்டி ஒரு 50 காசு கொடுக்க வேண்டும் என்று நினைக்கின்றேன். ஆனால் என்னிடம் ஒரு ரூபாய் தான் இருக்கிறது. அது தான் என்ன செய்வது என்று யோசிக்கின்றேன் என்றார் அவர். அதற்கு இவர். அப்படி என்றால் இன்னொரு தடவை குளத்திலே விழுங்கள் காப்பாற்றுகின்றேன். ஒரு ரூபாய் கொடுங்கள் என்றார். இந்தக் கருணையை என்ன ரகத்திலே சேர்க்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு காலங்களில் பொறுப்புடன் செயற்படுங்கள்

## மன்னார் மாவட்ட தொற்றா நோய் பிரிவு வைத்திய அதிகாரி



**(மன்னார்)**

**எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு பண்டிகையின் போது மக்கள் பாதுகாப்பாக பயணங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதோடு மது போதையில் வாகனம் செலுத்துதல் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும் என மன்னார் மாவட்ட தொற்றா நோய்பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி துரைநாயகம் ஒஸ்மன் டெனி தெரிவித்துள்ளார்.**

நேற்றுக் காலை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு பிறப்பு எங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான வருடமாக பிறக்கவுள்ள நிலையில் புத்தாண்டு காலப் பகுதியில் மக்களாகிய நாங்கள் சில விடயங்களைக் கடைபிடிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் பொதுவாக மது அருந்தி விட்டு வாகனங்களை செலுத்துதல் அல்லது மது அருந்தி விட்டு வேறு இடங்களுக்குப் பயணித்தல் மற்றும் பட்டாசு கொழுத்துதல் உள்ளிட்ட விடயங்களில் அவதானமாக செயற்பட வேண்டும்.

மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்துவதை முற்றாகத் தவிர்த்து கொள்வதுடன் மேலும் பாதுகாப்பான வகையில் பட்டாசுகள் மற்றும் வாணவேடிக்கைகள் கொளுத்த வேண்டும். புத்தாண்டையொட்டி விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் கலாசார நிகழ்வுகளை மாவட்டத்தில் முன்னெடுக்கின்ற போது மருத்துவக் குழுவுடன் இணைந்து முதலுதவி குழுவையும் இணைத்துக் கொண்டு குறித்த நிகழ்வுகளை நடாத்துவது ஏற்புடையதாக இருக்கும்.

எனவே புத்தாண்டு நிகழ்வுகளை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் இணைந்து முன்னெடுக்கின்ற போது குறித்த விடயங்கள் குறித்து அனைவரும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-8-285)

### ஸ்ரீ வாராஹி அம்பாளுக்கு நாளை கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு-வாராஹிபுரம் திருவருள் மிகு ஸ்ரீவாராகி அம்பாள் ஆலய திவ்ய-பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறவுள்ளது.

இவ் உற்சவங்களில் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று 16 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)

## ஸ்ரீ மனோன்மணி அம்பாள் மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடகீழ் வீதி அருள் மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் (2025) எதிர் வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.20 மணி முதல் 10.20 மணி வரையுள்ள இடபலக்ன சுப முகூர்த்த வேளையில் அம்பிகைக்கும் பரிவார மூர்த்தங்களுக்கும் இராஜகோபுரத்திற்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 5 மணிக்கு விசேட பூசையுடன் திருவூஞ்சலும் நடைபெற்று அம்பாள் உள்வீதி உற்சவமும் நடைபெறும். இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிவரை அம்பிகைக்கும் ஏனைய பரிவாரங்களுக்கும் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம் பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)

## யோகர் சுவாமிகளின் குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

தவத்திரு யோகர் சுவாமிகளின் குருபூசைதினம் எதிர் வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணி முதல் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தின் புராண மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

குருபூசைக்கு முதல் மூன்று நாட்களும் (04, 05, 06 ஆம் திகதிகளில்) வழமை போன்று ஆச்சிரம வாழ்வு நாட்களாக அனுஷ்டிக்கப்படும். இந் நாட்களில் நற்சிந்தனைமுற்றும் ஓதி நிறைவு செய்யப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)

## கொடூரமாக தாக்கப்பட்ட பெண் தலைமறைவான சந்தேகநபர்

### ஒட்டுசுட்டான் பொலிஸார் அதிரடி நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சின்னசாளம்பன் பகுதியில் பெண்ணொருவரை கொடூரமாகத் தாக்கிவிட்டு தலைமறைவான நபர் ஒருவர் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனமொன்றில் பணியாற்றும் முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான், சின்னச்சாளம்பன் பகுதியைச் சேர்ந்த இருபெண்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டையடுத்து, பெண்ணொருவரின் கணவர், மற்றைய பெண்ணை வீதியில் வைத்து மிகக் கொடூரமாகத் தாக்கியுள்ளார்.

இந் நிலையில் இவ்வாறு கொடூரமாகத் தாக்கப்பட்ட பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், குறித்த பெண்ணைத் தாக்கிய நபர் தலைமறைவாகியிருந்தார்.

இத்தகைய சூழலில் குறித்த தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தும் தாக்கிய நபரை உடனடியாகக் கைதுசெய்ய வலியுறுத்தியும் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் அப்பகுதி மக்களின் அழைப்பை ஏற்று குறித்த இடத்திற்கு விரைந்த வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பெண்ணைக் கொடூரமாகத் தாக்கிய குறித்த நபர் உடனடியாகக் கைதுசெய்யப்படவேண்டுமென பொலிஸாரிடம் வலியுறுத்தியிருந்தார்.

அதற்கமைய 24 மணி நேரத்திற்குள் குறித்த நபர் கைதுசெய்யப்படுவார் என ஒட்டுசுட்டான் பொலிஸார் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களிடமும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களிடமும் உத்தரவாதமளித்திருந்தனர்.

அந்தவகையில் குறித்த நபர் நேற்றைய தினமே கைது செய்யப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனைத் தொடர்புகொண்டு தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8-299)

### மரக்கறிச் சந்தை இடமாற்றம்

## போதிய வசதிகள் இல்லை-வியாபாரிகள் சட்டதிட்டத்தின் படியே இடமாற்றம்-செயலாளர்

(கரணவாய்)

பருத்தித்துறை நகர்பகுதியில் இயங்கி வந்த மரக்கறிச் சந்தையை நேற்று முதல் புதிய கட்டடத்திற்கு மாற்றுமாறு அறிவிக்கப்பட்டது. அதனை எதிர்த்து சில வியாபாரிகள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

புதிய சந்தையில் மரக்கறி வியாபாரத்தினை மேற்கொள்ளுமாறு சில மாதங்களுக்கு முன்னர் பருத்தித்துறை நகரசபையால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதனை எதிர்த்து மரக்கறி வியாபாரிகளால் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கானது எதிர் வரும் 20.06. 2025 அன்று தவணையிடப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் பருத்தித்துறை நகர சபையில் மரக்கறிச் சந்தை இடமாற்றப்பட்டுள்ளதாக அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளதாக மரக்கறி வியாபாரிகள் சிலர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

புதிய சந்தைப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் உள்ளதாகவும் பொருட்களை ஏற்றி இறக்குவதற்குரிய இடம் சரிவர அமையவில்லை எனவும் தெரிவத்த வியாபாரிகள் வாகன தரப்பிட வசதி ஏதுமில்லை என்றும் தெரிவித்தனர். இது தொடர்பில் பருத்தித்துறை நகரசபை செயலாளர் திருமதி. தாரணி கஜரூபன் கருத்துத் தெரிவிக்கையில், பருத்தித்துறை நீதிமன்றில் வியாபாரிகளால் தொடுக்கப்பட்ட வழக்கில் இடமாற்றத்திற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கடந்த தவணையின் போது குறித்த இடைக்கால தடை உத்தரவு நீதிமன்றினால் நீக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து பருத்தித்துறை நகரசபையினர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான சட்ட திட்டங்களுக்கமைய குறித்த புதிய சந்தைக்கு வியாபார நடவடிக்கையினை மாற்றம் செய்வதென தீர்மானிக்கப்பட்டு இடமாற்ற அறிவித்தல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-நி-8-60)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 739





கால்வாயில் விழப்போன ஒரு பெண்ணை இவர் தடுத்துக் காப்பாற்றினார் என்ற புகழை அளித்தேன் அல்லவா! அதற்காக இவர் என்னிடம் நன்றி செலுத்த வேண்டாமா?" இவ்விதம் கூறிவிட்டு வானதி சிரித்தாள். அதைக்கேட்ட குந்தவையும் சிரித்தாள். பொன்னியின் செல்வனும் சிரிப்பை அடக்கப் பார்த்து முடியாமல் 'குபீர்' என்று வாய்விட்டுச் சிரித்தான். அவர்கள் மூன்று பேரும் சேர்ந்து சிரித்த சிரிப்பின் ஒலி நந்தி மண்டபத்தைக் கடந்து, வான முகடு வரையில் சென்று எதிரொலி செய்தது.

படகில் இருந்தவர்களின் காதிலும் அந்தச் சிரிப்பின் ஒலி கேட்டது. "அமுதா! அந்த மூன்று பைத்தியங்களும் சிரிப்பதைக் கேட்டாயா?" என்று சொல்லிவிட்டுப் பூங்குழலியும் சிரித்தாள். அமுதனும் அவளுடன் கூடச் சிரித்தான். தென்னந்தோப்பில் வாசம் செய்த பட்சிகள் 'கிளுகிளு கிளுகிளு' என்று ஒலி செய்து சிரித்தன.

இத்தனை நேரமும் கால்வாயின் கரைமீது கம்பீரமாய் நின்ற காளையும் சிரித்து விட்டுச் சென்றது. கடல் அலைகள் கம்பீரமாகச் சிரித்தன. கடலிலிருந்து வந்த குளிர்ந்த காற்றும் மிருதுவான குரலில் சிரித்து மகிழ்ந்தது.

### முதலாம் அத்தியாயம்
### கெடிலக் கரையில்

திருமுனைப்பாடி நாட்டை வளப்படுத்திய இனிய நீர்ப் பெருக்குடைய நதிகளில் கெடிலம் நதியும் ஒன்று. அப்பர் பெருமானை ஆட்கொண்ட இறைவன் எழுந்தருளியிருந்த திருவதிகை வீரட்டானம் இந்த நதிக்கரையில் இருக்கிறது. சுந்தரமூர்த்தியைத் தடுத்தாட்கொண்ட பெருமான் வாழும் திருநாவலூர் இந்நதியின் அருகிலேதான் இருக்கிறது. இந்த இரண்டு ஷேத்திரங்களுக்கும் மத்தியில் தொண்டை நாட்டிலிருந்து நடு நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும் செல்லும் இராஜ பாட்டை அந்த நாளில் அமைந்திருந்தது. இராஜ பாட்டை கெடில நதியைக் கடக்கும் துறை எப்போதும் கலகலவென்று இருக்கும். நதிக்கரையில் உள்ள மரங்களில் பறவைகளின் குரல்களும், அவை இறகை அடித்துக்கொள்ளும் சத்தமும் கேட்டுக் கொண்டிருக்கும். பிரயாணிகள் அங்கே வண்டிகளிலிருந்து மாட்டை அவிழ்த்து விட்டுக் கட்டுச் சாதம் உண்பார்கள். உண்ணும் போது அவர்கள் விளையாட்டாக வானில் எறியும் சோற்றைக் காக்கைகள் வந்து அப்படியே கொத்திக் கொண்டு போகும். இவற்றையெல்லாம் பார்க்கும் இளம் சிறார்கள் கை தட்டி ஆரவாரித்தும், 'ஆஹா' என்று வியப்பொலிகள் செய்தும், கலகலவென்று சிரித்தும், தங்கள் குதூகலத்தை வெளியிடுவார்கள்.

ஐப்பசி மாதம் ஆரம்பத்தில் கெடில நதியில் வழக்கத்தை விட அதிகமாகவே வெள்ளம் போய்க்கொண்டிருந்தது. இதனால் உச்சி வேளையில் அங்கே கட்டுச் சாதம் அருந்துவதற்காகத் தங்கிய பிரயாணிகளின் ஆரவார ஒலிகளும் அதிகமாயிருந்தன. அந்த ஒலிகளெல்லாம் அமுங்கிப் போகும் படியான ஒரு பெரும் ஆரவாரம் திடீரென்று சற்றுத் தூரத்தில் சாலையில் எழுந்தது கேட்டுப் பிரயாணிகள் வியப்புற்றார்கள். அவர்களில் சிலர் கரையேறிப் பார்த்தார்கள். முதலில் புழுதிப் படலம் மட்டுமே தெரிந்தது. பிறகு யானை, குதிரை, பல்லக்கு, பரிவட்டம் ஏந்துவோர் முதலிய இராஜ பரிவாரங்கள் வருவது தெரிந்தது. (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## திருட்டுச்சாமியார் வேடம்



ஒரு பெரிய கிராமத்தில் ஒரு திருடன் இருந்தான் அவன் எப்பவும் சின்னச் சின்ன திருட்டுகள் செய்து கொண்டு சுத்திக்கொண்டு இருப்பான். எந்த வேலைக்கும் போகாமல் சோம்பேறியாக இருந்த அவனுக்குத் திருடுவது மூலமாகக் கிடைக்கிற பணத்தில் சாப்பிட்டு சந்தோசமா வாழ்ந்து வந்தான். அப்படி இருக்கும் போது ஒரு நாள் ஒரு அரசர் அந்தப் பகுதியில் நடக்கிற திருட்டைப்பற்றிக் கேள்விப்பட்டு ஒரு புத்திசாலியான தளபதியை அந்தப் பகுதிக்கு காவலாகப் போட்டார்.

புதிதாகத் தளபதி அந்தப் பகுதிக்கு வந்ததும் எல்லாப் பக்கமும் படை வீரர்களைக் காவலுக்குப் போட்டார், அதனால் திருடனுக்குப் பெரிய தொந்தரவாகப் போய் விட்டது. இதுநாள் வரை எந்தத் தொந்தரவும் இல்லாமல் திருட்டு வேலை செய்து கொண்டு சுகமாக வாழ்ந்த அவனால் திருட முடியவில்லை.

அதனால் என்ன செய்வது என்று நினைத்தான். அவன் நிறையப் பொன்னையும் பொருட்களையும் திருடிக் கொண்டு இந்த ஊரை விட்டு வெளியேற முடிவு செய்தான். அதனால் பக்கத்தில் இருந்த கோவிலுக்குள் சாமியார் மாதிரி தாடி, மீசை எல்லாம் ஒட்டிக் கொண்டு போய் நிறைய நகைகளையும் பாத்திரங்களையும் திருடிக் கொண்டு அந்தத் திருடன் இரவோடு இரவாக அந்த ஊரை விட்டே ஓடிப் போய்விட்டான்.

அதிக தூரம் ஓடி வந்த அந்தத் திருடன் ஒரு சின்னக் கிராமத்தை அடைந்தான். அங்கே இருந்த ஒரு பெரிய ஆல மரத்தில் திருடிக் கொண்டு வந்த பொருளை எல்லாம் மறைத்து வைத்தான், அதிக தூரம் ஓடி வந்ததால ரொம்ப சோர்ந்து போயிருந்த அவன், அந்த ஆலமரத் தடியிலேயே படுத்து தூங்கி விட்டான்

மறுநாள் காலையில் தாடி, மீசையோடு அவனைப் பார்த்த அந்தக் கிராமத்து மக்கள் அவனைப் பெரிய சாமியார் என்று நினைத்து விட்டார்கள் அதனால அவனிடம் வந்து ஆசீர்வாதம் வாங்கினார்கள். அவனுக்கு அப்போது தான் புரிஞ்சது அடடா இது நல்ல யோசனையா இருக்கே.

இந்த ஊரில ஒளிந்து இருந்து திருடிட்டு வந்த பொருளை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா விற்று சாப்பிட்டுக் கொண்டு இருக்கலாம் என்று முடிவு செய்தான் அந்தத் திருடன். அன்றில் இருந்து அவனை நிறைய பக்தர்கள் தேடி வந்தார்கள்.

வந்தவர்கள் எல்லாரும் அவனுக்கு சுவையான உணவும் பரிசுப் பொருட்களும் கொண்டுவந்து கொடுத்தாங்க ரொம்ப சந்தோஷமாக அந்த திருடன் அங்கேயே தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கினான், கொஞ்சம் கொஞ்சமாக தனக்கு கிடைத்த பரிசுப் பொருட்களை வித்து அந்த மரத்தை ஒட்டி ஒரு குடிசையும் கட்டிக் கிட்டு வாழ்க்கையைத் தொடர்ந்தான்.

ஆனால் திருடனைப் பிடிக்க வந்த தளபதி கோவிலில் திருட்டு நடந்ததற்கு அப்புறமாக நிறைய திருட்டு நடக்காததைக் கவனித்தார். புத்திசாலியான அவர் அப்ப இங்க இருந்த திருடன் வேற ஊருக்கு போய்விட்டான என்று முடிவு செய்தார். அப்போது தான் ஒற்றர்கள் மூலமாக பக்கத்து கிராமத்தில ஒரு புது சாமியார் வந்திருக்குறதையும், அவரிடம் ஆசீர்வாதம் வாங்க நிறைய கூட்டம் கூடுவதையும் தெரிந்து கொண்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதாரப் பிறருக்குச் செய்யும் உதவி பலமடங்கு பலனாக வந்து சேரும்.

~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதேச வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யுங்கள்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்னர் அரசினர் பொது வைத்தியசாலை யாக இயங்கியது.

அதனை நம்மவர்கள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி என்றே அழைத்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் அமையப் பெற்றதனால், யாழ்ப்பாணம் அரச பொது வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக (Teaching Hospital) மாற்றம் செய்யப்பட்டது.

உண்மையில் தமிழ் மக்கள் விட்ட பெரும் தவறு யாழ்ப்பாணம் அரச பொது வைத்திய சாலையை போதனா வைத்தியசாலையாக மாற்றுவதற்கு அனுமதித்தமையாகும்.

இதை நாம் கூறும்போது இஃதென்ன என்று நீங்கள் நெற்றிப் புருவங்களை உயர்த்தலாம்.

ஆனால் உண்மை அதுதான். ஆம், யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி என்றைக்கு போதனா வைத்தியசாலையாக மாற்றப்பட்டதோ அன்று தொட்ட நாசம்தான் எல்லாம்.

உண்மை. நாங்கள் ஆய்வுகூடத் தவளைகள். அவர்கள் (மருத்துவர்களும் மருத்துவ பீட மாணவர்களும்) ஆய்வாளர்கள்.

இன்று எத்தனை ஆண்டுகள் கடந்துவிட்டன. நாமும் பல்வேறு சந்தர்ப்பங்களில் யாழ். போதனா வைத்தியசாலையை அவதானித்து வருகின்றோம்.

ஒரு குறிப்பிட்ட மருத்துவர்களைத் தவிர ஏனைய மருத்துவர்களிடம் ஈவும் இல்லை. இரக்கமும் இல்லை. ஏன்? கடமை உணர்வும் இல்லை.

இதை நாம் கூறும்போது, எப்படி நீங்கள் கூறமுடியும் என்று கேட்டால், நடந்த சம்பவங்களை எம்மால் எடுத்துரைக்க முடியும்.

அதுமட்டுமல்ல, நோயாளர் விடயத்தில் எந்தெந்த மருத்துவர்கள் எப்படி நடந்தார்கள் என்பதையும் ஆள் அடையாளம் காட்டி ஆதாரப்படுத்தவும் முடியும்.

நாம் இங்கு கேட்பது யாழ்ப்பாண மருத்துவ பீடத்தில் படித்து, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்தவர்களைச் சோதித்து, அவர்களின் சுயகௌரவங்களையெல்லாம் வேரறுத்துப் படித்த நீங்கள் அந்த நன்றியை ஒரு சிறு துளியேனும் நினைத்திருப்பீர்களாயின், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையை நம்பி வந்த எத்தனையோ நோயாளர்கள் பின் பாதையால் போக வேண்டிய தேவை இருந்திராது.

அதிலும் நோயாளர்களை விடுதியில் அனுமதிப்பதற்கான அறையில் கூப்பிடு தூரத்தில் நோயாளியை இருத்தி, சம்பந்தப்பட்ட நோயாளி எந்த உயர் பதவியில் இருந்தாலும் அவரை ஒரு கூலித்தொழிலாளியை விட மோசமாக நடத்துகின்ற அந்த மருத்துவர்களை நினைக்கும்கால்; ஒரு முனிபுங்கவராக மாறி, அவர்களைச் சபிக்கும் வரம் கிடையாதோ என்று எண்ணத் தோன்றும்.

இதற்கும் மேலாக, யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் மருத்துவர்கள் தவிர்ந்த ஏனையவர்களில் கணிசமான பகுதியினர் செய்கின்ற துரோகம் சொல்லி மாளா.

இந்தக் கொடுமைகள் போகட்டும். நாம் எங்களை மாற்றுவோம். போதனா வைத்திய சாலை எனும் ஆய்வுகூடத்துக்கு ஆய்வுகூடத் தவளைகளாகப் போவதைவிட, எங்கள் ஊர்களில் உள்ள பிரதேச வைத்தியசாலைகளுக்கு மனிதர்களாகச் செல்வோம். மரணித்தாலும் பரவாயில்லை.

ஆகையால் எங்கள் பிரதேச வைத்திய சாலைகளை வளப்படுத்துங்கள். அபிவிருத்தி செய்யுங்கள். இதுவே எங்கள் வேண்டுதல்.

# தாரைவார்க்கப்பட்ட கச்சதீவை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இலங்கை பயணமாகவுள்ள மோடிக்கு ஸ்டாலின் கடிதம்

இலங்கைக்கு அரசுமுறை பயணமாக செல்லும் பிரதமர் நரேந்திர மோடி, தாரைவார்க்கப்பட்ட கச்சதீவை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் இலங்கை சிறையிலிருந்து, தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்களை விடுதலை செய்து மீட்டுவர வேண்டும் என்று தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதத்திலே இந்த கோரிக்கைகளை முன்வைத்துள்ள மு.க.ஸ்டாலின் மேலும் குறிப்பிட்டுள்ள தாவது,

பாக் வளைகுடாப் பகுதியில் வாழும் இந்திய கடற்றொழிலாளர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்கும் வகையில், கச்சதீவை திரும்பப் பெறுவது தொடர்பாக 02.04.2025 அன்று தமிழ்நாட்டு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முன்னதாக, 1974 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்தியா-இலங்கை இடையேயான கச்சதீவு ஒப்பந்தமே, நீடிக்கும் இந்தப் பிரச்சனைக்கு அடிப்படையாக உள்ளது.

28.06.1974 அன்று மத்திய அரசு, கச்சதீவு ஒப்பந்தத்தில் மாநில அரசின் இசைவின்றி கையெழுத்திட்ட பிறகு, அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி உடனடியாக மறுநாளே, அதாவது 29.06.1974 அன்று, தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அதைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி, அன்றைய தினமே அப்போதைய இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பினார்.

இதனைத் தொடர்ந்து, கச்சதீவை திரும்பப் பெற வேண்டும் என்ற நிலையான கோரிக்கையை வலியுறுத்தி, 03.10.1991, 03.05.2013, 05.12.2014 ஆகிய நாட்களில் தமிழ்நாட்டு சட்டமன்றப் பேரவை இதே போன்ற தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன.

இந்நிலையில், இலங்கைக் கடற்படையினரால் இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்படுவது மற்றும் தாக்கப்படுவது குறித்து 2021 ஆம் ஆண்டு முதல் வெளியுறவுத் துறை அமைச்சருக்கும் பிரதமருக்கும் பலமுறை கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன என்றும் ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-4)

## பரந்தன் இரசாயன தொழிற்சாலையின்

### 15 ஏக்கர் காணி இராணுவத்தால் விடுவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பரந்தன் இரசாயன தொழிற்சாலையின் இராணுவத்தினர் வசமிருந்த 15ஏக்கர் காணி இராணுவத்தினரால் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

பரந்தன் இரசாயன தொழிற்சாலையின் 15 ஏக்கர் காணி தொடர்ந்தும் இராணுவத்தினர் வசமிருந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த காணி கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரனிடம் 553வது படைப்பிரிவின் நிர்வாக அதிகாரியினால் நேற்று கையளிக்கப்பட்டது.

யுத்தம் காரணமாகக் கைவிடப்பட்ட பரந்தன் இரசாயன தொழிற்சாலைக் காணி யுத்தம் நிறைவடைந்த பின்னர் இராணுவத்தினரின் கட்டுப் பாட்டில் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## மருந்தகக் கூட்டுத்தாபனத்தில் ரூ. 2.7 மில்லியன் நிதி மோசடி

### இரு பெண்கள் உட்பட மூவர் கைது

இலங்கை ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் கணினி மென்பொருள் அமைப்பில் தரவு மாற்றம், மற்றும் காசோலைகள் மூலம் 2.7 மில்லியன் ரூபாவிற்கு அதிகமான நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண்கள் இருவர் உட்பட மூவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆயுர்வேத மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரினால் கடந்த 20ஆம் திகதி முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 35 வயதுடைய சந்தேகநபரும் அவருக்கு உதவி புரிந்த குற்றச்சாட்டில் 25 மற்றும் 32 வயதுடைய இரு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் களனிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ம-4)

## இலங்கை திறந்த பல்கலையின் திறந்த நாள் நிகழ்வு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் 2025 ஆம் ஆண்டுக்கான திறந்த நாள்(Open Day) நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இத்தினங்களில் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் சார்ந்த கற்கை நெறிகளுக்கான விளக்கங்களையும் வழிகாட்டல்களையும் மாணவர்கள், பெற்றோர் மற்றும் கல்வி ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற முடியும் எனப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-4)

## அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இணையப் பாதுகாப்பு தொடர்பான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இணையப் பாதுகாப்பு (Cyber Security) தொடர்பாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை 09.30 மணி தொடக்கம் பி.ப 03.30 மணி வரை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைமையுரையாற்றிய மாவட்ட அரசாங்க அதிபர், தற்போதைய காலகட்டத்தில் இணைய செயற்பாடுகள் அலுவலக செயற்பாடுகளுடன் இணைந்திருப்பதாகவும், தற்போது அரசாங்க சேவையினை துரிதப்படுத்துவதற்காக தகவல்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் இணைய வழிகளிலும் மற்றும் வட்சப் (WhatsApp) குழுமத்தின் ஊடாகவும் பரிமாறப்படுவதாகவும் அது விரைவான வினைத்திறனான சேவைக்கு துணை நிற்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் இணையவழி பாதுகாப்புத் தொடர்பான இச்செயலமர்வு பயனுறுதி வாய்ந்தது எனவும், ஆதலால் உத்தியோகத்தர்கள் இதனைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார்.

இச்செயலமர்வில் வளவாளர்களாக CERT நிறுவனத்தின் முகாமையாளர் திலின திசாநாயக்க, பொறியியலாளர்களான திருனி திசார, பாத்திமா மினோசா, ஷர்மி அகமட் மற்றும் தர்சினி டிலானி ஆகியோர் பங்குபற்றினார்கள்.

இச் செயலமர்வில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதம பொறியியலாளர், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர், பிரதேச செயலக உதவி மாவட்டச்செயலாளர்கள், கணக்காளர்கள், மாவட்ட, பிரதேச செயலக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உட்பட மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ம-4,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் மாத இராசி பலன்கள்

## சமாளிக்கும் ஆற்றல்கொண்ட மிதுன இராசிநேயர்களே!



**கிரகநிலை** - இராசியில் செவ்வாய் - சுக ஸ்தானத்தில் கேது - பாக்கிய ஸ்தானத்தில் புதன் . சனி - தொழில் ஸ்தானத்தில் ராகு. சுக்கிரன்(வ). சூரியன் - லாப ஸ்தானத்தில் சந்திரன் - அயன சயன போக ஸ்தானத்தில் குரு என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 07.04.2025 அன்று செவ்வாய் பகவான் ராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 10.04.2025 அன்று புதன் பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.04.2025 அன்று சூரிய பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.04.2025 அன்று ராகு பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.04.2025 அன்று கேது பகவான் சுக ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார் . 30.04.2025 அன்று புதன் பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** சாமர்த்திய மிதுனம் என்ப தற்கேற்ப நன்றாகச் சிந்தித்து நல்ல யோச னைகளால் மற்றவர் மனம் நோகாமல் சாமர்த்தியமாகப் பேசிசமாளிக்கும் ஆற்றல் கொண்ட மிதுன ராசி நேயர்களே. இந்த மாதம் செயற்படாமல் முடங்கிக் கிடந்த திட்டங்கள் அனைத்தும் செயற்பாட்டுக்கு வந்து விடும். உங்கள் செயற்பாட்டின் ஒவ்வொரு வெற்றிக்கும் உறவினர்கள், நண்பர்களின் உதவிக்கரம் முழுக் கார ணமாக இருக்கும். பொருளாதாரத்தில் உயர்வு உண்டாகும். கணவன் மனைவி குடும்ப ஒற்றுமையில் அனுகூல பயன்கள் உண்டாகும். தந்தை வழி உறவினர்கள் உங்கள் வளர்ச்சி கண்டு சிறிது பொறாமைப்படுவார்கள்.

**உத்தியோகத்தர்கள்:** அரசு மற்றும் தனியார்துறைகளில் பணிபுரிபவர்களின் செயலில் இருந்த மந்தநிலைகள் நீங்கி சுறுசுறுப்பான செயற்பாடுகள் உருவாகும். நிர்வாகத் திறமையை வளர்த்துக்கொள்ள தேவையான பயிற்சிப் படிப்புகளை மேற் கொள்வீர்கள். தொழிலதிபர்கள் தங்க நகைகளை உற்பத்தி மற்றும் விற்பனை செய்பவர்கள். இரத்தினக்கற்கள் விற்பனை யாளர்கள் புதிய வாடிக்கையாளர்களை நிரம்ப பெற்று நன்மதிப்பும் பொருளாதார உயர்வும் பெறுவார்கள். வியாபாரம் செய்பவர்கள் புதிய ஓடர்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**பெண்கள்:** அரச துறை மற்றும் தனியார்துறையில் பணிபுரிபவர்கள் மேல திகாரிகளின் பாராட்டுதல்களைப் பெறு வார்கள். திருமணம் ஆன பெண்கள் புத்திரதோஷம் அமைப்பிற்குள் வருவதால் உரிய முறையில் பரிகாரம் செய்வது சிறந்தது.

**கலைத்துறையினர்:** தொழில் வாய்ப்பு கள் பெற்று வருமானம் அதிகரித்து வீடு மனை வாங்கும் யோகம் பெறு வார்கள். கலைஞர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியத் தை பெறுவதில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவர்.

**அரசியல்வாதிகள்:** மக்களுக்குத் தேவை யானவற்றை பெற்றுத்தர எடுக்கும் முயற்சி களோடு தங்கள் வாழ்க்கைக்குத் தேவை யான சுக சௌகரியங்களைப் பெற வேண்டிய ஏற்பாடுகளையும் செயற்




படுத்துவீர்கள். உங்கள் கோரிக்கைகள் முக்கியமானதாகக் கருதப்பட்டு உடனடியாக நிறை வேற்றப்படும்.

**மாணவர்கள்:** அறிவியல் தொழில் நுட்ப மாணவர்களும் ஆரம்ப நிலை மாணவர்களும் படிப்பினில் ஆர்வம் காட்டிப் பெற்றோருக்கு நற்பெயர் வாங்கித் தருவர். வக்கீல் தொழிலில் ஜூனியராக இருந்து பயிற்சி பெறும் மாணவர்கள் தகுந்த சமயத்தில் சட்ட நுணுக்கங்களை அறிந்து கொள்வீர்கள்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எதிலும் சாமர்த்தியமாக செயற்பட்டு காரிய வெற்றி பெறுவீர்கள். வீண் அலைச்சல் உண்டாகும். வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். பணவரத்து கூடும். அயலவர்க ளுடன் பழகும்போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும்.

**திருவாதிரை:** இந்த மாதம் கணவன். மனைவிக்கிடையே ஒற் றுமை அதிகரிக்க மனம் விட்டுப்பேசுவது நன்மை தரும். உறவினர்கள் வருகை இருக்கும். அவர்களிடம் நிதானமாகப் பேசுவது நன்மை தரும். பிள்ளைகளிடம் கோபம் காட்டாமல் அன்பாகப் பேசுவது நல்லது. மகிழ்ச்சி உண்டாகும்.

**புனர்பூசம்1, 2, 3ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில். வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள். வாடிக்கையாளர் களை அனுசரித்துச் செல்வதன்மூலம் கூடுதல் இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமை யுடன் செயற்பட்டு நிர்வாகத்தினரால் பாராட்டுக் கிடைக்க பெறுவார்கள்.

**பரிகாரம்:** முடிந்தவரை புதன்கிழமை தோறும் அருகிலிருக்கும் பெரு மாள் கோவிலுக்குச் சென்று 11 முறை வலம் வரவும்.

**அதிஷ்ட கிழமைகள்:** புதன், வியாழன்
**சந்திராஷ்டம தினங்கள்:** 21. 22
**அதிஷ்ட தினங்கள்:** 13. 14. 15

## எதிர்ப்பைக் கண்டு அஞ்சாத குணம் கொண்ட கடக இராசி நேயர்களே!



**கிரகநிலை** - தைரிய வீரிய ஸ்தானத் தில் கேது - அஷ்டம ஸ்தானத்தில் புதன் , சனி - பாக்கிய ஸ்தானத்தில் ராகு. சுக்கிரன் (வ). சூரியன் - தொழில் ஸ்தானத்தில் சந்திரன் - லாப ஸ்தானத் தில் குரு - அயன சயன போக ஸ்தானத் தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 07.04.2025 அன்று செவ்வாய் பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து கடக ராசிக்கு மாறுகிறார். 10.04.2025 அன்று புதன் பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.04.2025 அன்று சூரிய பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.04.2025 அன்று ராகு பகவான் பாக்கிய ஸ்தா னத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.26.04.2025 அன்று கேது பக வான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறு கிறார். 30.04.2025 அன்று புதன் பக வான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** எதிர்காலம் நம் கையில் என்பதற்கேற்ப எதற்கும் கலங்காத மன மும் எதிர்ப்பைக் கண்டு அஞ்சாத குண மும் கொண்ட கடக ராசிநேயர்களே. இந்த மாதம் குடும்பத்தில் ஒற்றுமை கூடும். அரசாங்க அதிகாரிகளின் அனுகூலமான செயல்கள் உங்களுக்குத் தேவையான சமயத்தில் கிடைக்கும். பூமி தொடர்பான விற்பனை தொழில் வாய்ப்புகளைப் பெற்றவர்கள் சுமாரான அளவில் லாபம் பெறுவார்கள். பெற்ற புகழுடன் புதிய புகழும் வந்து சேரும். ஆன்மிக எண்ணங் களில் மனம் ஈடுபாடு கொள்ளும். எதிரிகள் மறைந்திருந்து கெடுதல் செய்வார்கள். கவனமுடன் இருக்கவும்.

**உத்தியோகத்தர்கள்:** அரசுத்துறை களில் அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் சிலரது குறுக்கீடுகளின் காரணமாக சோர்வு மனப்பான்மைக்கு ஆளாவார்கள். பின்னர் வரும் காலங்களில் தகுந்த ஆலோசனைகள் கிடைக்கப்பெற்றுத் தங் கள் பணியில் சிறந்து விளங்குவார்கள். தொழிலதிபர்கள் தங்கள் தொழிலில் வெற்றியும் புகழும் பெறுவார்கள். ரியல் எஸ்டேட் செய்பவர்கள் தங்கள் தொழிலை வளர்த்துக் கொள்வார்கள். தொழில் ரீதியாகப் புதிய ஆலோசகர்கள் கிடைத்து தொழில் சிறக்க வழி காட்டுவார்கள். வாகனங்களில் செல்லும் பொழுது மிகுந்த கவனத்துடன் செயற்படுவது நல்லது.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்கள் சிறந்து மந்தநிலை காண்பார்கள். அரசிடம் கேட்டி ருந்த கடனுதவிகள் மற்றும் வரவேண்டிய நிலுவைத்தொகைகள் எளிதாகக் கிடைக் கும். பணிபுரியும் இடத்தில் இடைஞ்சல் செய்யும் நோக்குடன் சிலர் செயற்படு வார்கள்.

**கலைத்துறையினர்:** கடன் வாங்கி செலவழிக்கும் நிலை உண்டாகும். தொழில் ரீதியாக உங்களைப் புறந்தள்ள நட்புடன் பழகியவர்களே முயற்சி செய்வார்கள். கடின உழைப்பை செயற்படுத்தினால் மட்டுமே முன்னேற முடியும்.




**அரசியல்வாதிகள்:** பொதுமக்களுக்கு செய்யவேண்டிய பணிகள் உங்களுக்கு நிறையவே காத்திருக்கிறது. ஏற்கனவே இருக்கும் நல்ல பெயரை தற்காத்துக் கொள்வதற்கு இந்தக் காலகட்டம் மிகவும் உதவிகரமாய் இருக்கும்.

**மாணவர்கள்:** சிறப்பான பலனைக் காணலாம். நல்ல மதிப்பெண்கள் கிடைக் கும். மேல்படிப்பில் விரும்பிய பாடம் கிடைக்கும். வழக்கு விவகாரங்கள் உங்களுக்குச் சாதகமாக இருக்கும். கைவிட்டுப் போன பொருட்கள் மீண் டும் கிடைக்கும்.

**புனர்பூசம் 4ஆம் பாதம்:** இந்த மாதம் எதிர்ப்புகள் அகலும். தெளிவான மனநிலை இருக்கும். எதிலும் சாமர்த் தியமாக செயற்பட்டுச் சாதகமான பலன் பெறுவீர்கள். செயற்றிறன் அதிகரிக்கும் ஆனால் உங்களுக்கு எதிராக சிலர் செயற்படும் சூழ்நிலை இருப்பதால் கவனம் தேவை. நெருக்கடியான சமயத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தாமதப் படும்.

**பூசம்:** இந்த மாதம் எந்த ஒரு காரி யத்தை செய்யும் முன்பும் அதை எப்படிச் செய்வது என்ற மனத்தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். அவசர முடிவுகளைத் தவிர்ப்பது நன்மை தரும். எதிர்காலம் பற்றி முக்கிய முடிவுகளை எடுக்க நினைப்பீர்கள். அடுத் தவர் யோசனைகளைக் கேட்டு தடு மாற்றம் அடையாமல் இருப்பது நல்லது.

**ஆயில்யம்:** இந்த மாதம் குடும்பத்தில் நடைபெறும் சில விடயங்கள் உங்கள் கோபத்தைத் தூண்டலாம். எனவே வீண் வாக்குவாதங்களில் ஈடுபடாமல் மிகவும் கவனமாகப் பேசுவதன் மூலம் நன்மை உண்டாகும். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உறவினர்கள் மத்தி யில்இருந்த பழைய பகைகள் மாறும்.

**பரிகாரம்:** திங்கட்கிழமை தோறும் அருகிலிருக்கும் அம்மன் ஆலயத்திற்குச் சென்று எலுமிச்சைப் பழத்தில் தீபம் ஏற்றி வழிபடவும்

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு. வியாழன். வெள்ளி
**சந்திராஷ்டம தினங்கள்:** 23. 24
**அதிஷ்ட தினங்கள்:** 16. 17

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 கிலோ...

பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, அதனை உடைமையில் வைத்திருந்த கணேசபுரம், கூமாங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 25 - 32 வயதிற்குட்பட்ட மூவர் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் கைது செய்யப்பட்ட நபர்கள் நெளுக்குளம் பொலிஸாரிடம் விசேட அதிரடிப் படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ம-4,250)

## கச்சதீவு...

இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் மற்றும் கச்சதீவு பிரச்சினை என்பன தொடர்பில் யாழில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

"தமிழகத்தில் தேர்தல் வருவதாக இருந்தால், அதனோடு சேர்ந்து கச்சதீவுப் பிரச்சினையும் வந்துவிடும். அதேபோல தேர்தல் பிரசாரத்திலும் அது பேசுபொருளாக மாறும். கருணாநிதி, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா காலங்களிலும் இதுபற்றிப் பேசப்பட்டது. தற்போது முதல்வர் மு.க.ஸ்டாலினும் அவ்வழியைக் கையாண்டுள்ளார்.

ஆனால் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதை சர்வதேசம் கூட அங்கீகரித்துள்ளது." எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எனவே, தமிழகத்தில் தேர்தலுக்கு வேண்டுமானாலும் கச்சதீவு பிரச்சினையை வைத்து விளையாடலாம். அது இலங்கைக்குரியது என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என்றார். (ம-4)

## காலியில்...

பலத்த காயமடைந்த கணவன், மனைவி இருவரும் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது கணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதிக்கு அருகில் உள்ள ஒரு கடையில் காத்திருந்த தம்பதியை இலக்கு வைத்து மேற்படி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த நபரொருவரே இவ்வாறு துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (ம-4)

## முதிர்ச்சியுடன்...

ஆலோசனை வழங்கியுள்ளார்.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் 44% வரியை விதிக்க அமெரிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இந்தப் புதிய வரிகள் நாளை முதல் அமுல்படுத்தப்படும் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அமெரிக்கா விதித்த வரிகள் குறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இலங்கை மீதான 44% அமெரிக்க வரி என்பது வெறும் வர்த்தகப் பிரச்சினை மட்டுமல்ல, அது ஒரு விழிப்புணர்வுக்கான அழைப்பு என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.

அந்தப்பதிவில் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, தற்போது அரசாங்கத்தில் இருப்பவர்கள் கடந்த காலத்தில் ஒவ்வொரு வர்த்தக ஒப்பந்தத்தையும் தடுத்தனர்.

உலகமயமாக்கல் மீது நம்பிக்கை யற்றுப் போயினர். முதலீட்டை ஊடுருவலாகப் பார்த்தனர். அந்த மரபு முடிவுக்கு வர வேண்டும். அவர்கள் தங்கள் நிலைப்பாட்டை மாற்ற வேண்டும். இலங்கைக்கு ஒரு மூலோபாய மறுசீரமைப்பு தேவைப்படுகிறது. சிந்தனை உணர்வுகளுக்கு மேல் கூட்டாண்மைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பரஸ்பர நலன்களைப் பாதுகாப்பதே முன்னோக்கிச் செல்லும் ஒரே வழி. எதிர்த்து நிற்பது உத்தி அல்ல. முதிர்ந்த நாடுகள் பேச்சுவார்த்தை நடத்துகின்றன. நாமும் அதைச் செய்ய வேண்டிய நேரம் இது" என சஜித் பிரேமதாஸ தனது எக்ஸ் பதிவில் பதிவிட்டுள்ளார். (ம-4)

## நிராகரிக்கப்பட்ட...

பாட்டுத் தலைவர்) எம்.டி. முகமது லாஃபர் மற்றும் நீதியரசர் கே.பி.பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய மேல் முறையீட்டு நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவை நேற்றுப் பிறப்பித்தது. (ம-4)

## 44 சதவீத...

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள புதிய பரஸ்பர வரியினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்து ஆழமான ஆய்வு மேற்கொண்டு அரசாங்கத்திற்கு பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க குழுவொன்றை நியமித்துள்ளார்.

அதன்படி நிதி அமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், இலங்கை முதலீட்டு சபையின் தலைவர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர், வெளியுறவு அமைச்சின் பொருளாதார விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம், ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, இலங்கை வர்த்தக சபையின் பிரதான பொருளாதார கொள்கை ஆலோசகர் ஷிரான் பெர்னாண்டோ, அஷ்ரப் ஒமர், ஷெராட் அமலீன் மற்றும் சைப் ஜெபர்ஜி ஆகியோர் இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் புதிய வரிக் கொள்கையின்படி, அனைத்து இறக்குமதி பொருட்களுக்கும் 10 சதவீத வரி உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அமெரிக்காவுடன் வர்த்தக உபரியை நடத்தும் நாடுகளுக்கும் அதிக வரி அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கை மீது 44 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ள நிலையில், அமெரிக்காவால் உலகில் அதிக வரி விதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் முதல் ஐந்து நாடுகளுக்குள் இலங்கை இடம்பிடித்துள்ளது.

இந்நிலையில் கம்போடியா மீது 49 சதவீத வரியும், வியட்நாம் மீது 46 சதவீத வரியும் விதிக்கப்பட்டுள்ளதுடன் பங்களாதேஷுக்கு 37 சதவீதமும் தாய்லாந்திற்கு 36 சதவீதமும் சீனாவிற்கு 34 சதவீதமும் இந்தியாவிற்கு 26 சதவீதமும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு 20 சதவீதமும் வரி விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்கா 12.2 சதவீத வரியை விதித்துள்ள நிலையில் இந்த புதிய வரி விதிப்பு நாட்டின் ஏற்றுமதித் துறையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ம-4)

(மற்றொரு செய்தி உள்ளே)

## யாழில்...

நீதியமைச்சர் கலந்துரையாடிவிட்டு ஊடகவியாளர்கள் நீதியமைச்சரின் கருத்துக்காக முன்வாசலில் காத்திருந்தபோது ஊடகவியாளர்களைத் தவிர்ப்பதற்காக நீதியமைச்சர் பின் வாசலினால் வெளியேறினார். (ம-4,33)

### மஹஜன சம்பத
திகதி 2025.04.03
சீட்டிழுப்பு இலக்கம் 5795
W 2 5 3 4 8 9
அத சம்பத: W 3 4 8 9 — சீட்டிழுப்பு இலக்கம் 0370
National Lotteries Board

### தன நிதானய
திகதி - 2025.04.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1825
B 14 22 34 61 B
Double Chance 16162

### மெகா பவர்
திகதி 03/04/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2143
E 25 | 25 50 67 76

### ஜய (Jaya)
திகதி 2025.04.03
சீட்டிழுப்பு இலக்கம் 063
R 4 4 4 3

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4037
சீட்டிழுப்பு திகதி 03.04.2025
W 22 24 60 67
W

### ஹந்தஹன (HANDAHANA)
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.03
சீட்டிழுப்பு இலக்கம் 1104
விருச்சிகம் 03 33 40 43 விருச்சிகம்
12682 — 21

### உத்தியோகபூர்வ முடிவுகள் (DLB)
03.04.2025 வெற்றி வாரம் 503
W 6 2 3 8 2 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.34,889,605.20
66549

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2769
சீட்டிழுப்பு திகதி 2025.04.03 — தினம் வியாழக்கிழமை
20 21 69 73 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,394,396.00

### சனிதா (Shanida)
திகதி 03.04.2025 வெற்றி வாரம் 4930
18 28 41 48 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,387,844.00
ரூ. 100,000/- 95814

### சசிரி
வெற்றி வாரம் 656 — சீட்டிழுப்பு திகதி 03.04.2025 — வியாழக்கிழமை
37 42 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

### லக்ன வாசனா
சீட்டிழுப்பு வாரம் 4481
சீட்டிழுப்பு திகதி 03.04.2025 — தினம் வியாழக்கிழமை
15 31 37 60 — சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,549,874.40
115443

### கப்ருக
V 14 01 23 38 71
1945 — 03.04.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.570,755,285.20

### அட கோடிபதி (ADA KOTIPATHI)
வியாழக்கிழமை — வெற்றி வாரம்: 2595 — சீட்டிழுப்புத் திகதி: 2025.04.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,503,323.20
03 12 21 24 X
ரூ.100,000/- 231374

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

BARATHY

சித்தன்கேணி

[எமது மூன்று நிறுவனங்களிலும்]

A/L 2027

கலை வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்

ஏப்ரல் 06 ஞாயிறு காலை 8.00

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

A/L 2025, 2026 பிரிவு I, II

நடைபெறுகின்றன.

(C-2613)

தொடர்புகளுக்கு: 077 376 3511


## பாரதப் பிரதமர்...

கைக்கு வரவுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான "நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்துக்கான உறுதிப்பாடு" (Friendship Of Centuries Commitment to Prosperous Future) என்ற எண்ணக் கருவை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இந்த விஜயத் தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய் சங்கர் உட்பட உயர் மட்ட இந்தியக் குழுவும் இணையவுள்ளது.

இந்தியப் பிரதமருக்கான உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வு ஏப்ரல் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை கொழும்பில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் நடைபெறும்.இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதோடு இருதரப்புப் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பிலும் கலந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இதன்போது எரிசக்தி, டிஜிட்டல் மயமாக்கல், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் இந்தியாவுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் ஆகியவை பரிமாறிக் கொள்ளப்படும்.

இந்திய ஒத்துழைப்புடன் மேற் கொள்ளப்படும் சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத் திட்டம் ஆரம்பிப்பு, வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய 5,000 மெட்ரிக் தொன் தம்புள்ள களஞ்சிய வளாகத்தின் நிர்மாணம் (குளிர்பதன திட்டம்), 5,000 மதத் தலங்களின் கூரைகளில் சூரிய மின்கலங்களை நிறுவும் திட்டம் என்பன நரேந்திர மோடி ஒன்லைன் ஊடாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதேபோல் இந்தியப் பிரதமர் அநுராதபுரம் ஸ்ரீ மகாபோதிக்கு வழிபாடு மேற்கொள்ளவிருப்பதுடன் இந்திய அரசாங்கத்தின் அன்பளிப்புடன் நிறுவப்பட்ட மஹவ-அநுராதபுரம் ரயில் சமிக்ஞை கட்டமைப்பு மற்றும் மறுசீரமைக்கப்பட்ட ரயில் பாதையை திறந்து வைக்க வும் திட்டமிடப் பட்டுள்ளது.

ஏப்ரல் 06ஆம் திகதி பிற்பகல் இலங்கைக்கான சுற்றுப் பயணத்தை நிறைவு செய்துகொண்டு இந்தியப் பிரதமர் நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்வார். (ம-4)

# மோ.சைக்கிள் விபத்து பெண் தாதி மரணம்

## இளவாலை விளான் சந்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இளவாலை விளான் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் தாதி உத்தியோகத்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் சித்தன்கேணியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான இரவீந்திரன் கிருஷ்ண வேணி(வயது - 52) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 26 ஆம் திகதி மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-4)


# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் கிழக்கில் 38 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இருவழிப் பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதி முகப்புடன் பதினேழு இலட்சம் ரூபாய் (17,00 000/=). இரண்டாம் காணி (நடுப் பகுதி) பதினைந்து லட்சம் (15, 00 000/=). பின் பகுதிக் காணி எட்டு லட்சம் ரூபாய் (8,00 000/=)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 ½ Km. பருத்தித்துறை பஸ் நிலையம் 2 Km. மந்திகை ஆஸ்பத்திரி 1 Km. பருத்தித்துறை வீதி 600m. மாலு சந்தி 1 Km தூரம்.
- தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 Km தூரம். மாலு சந்தி பிள்ளையார் கோயில் 1 Km தூரம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி. செம்மண் தரை. நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை.

(பார்வையிடும் நேரம் காலை 8.00 – மாலை 6.00 மணி வரை)

தொடர்புகளுக்கு:

076 860 2770, 076 987 8617

076 935 3971

(3845)



# NEC

யாழ் நகர், பெருமாள் கோவில் அருகாமை

A/L 2027 கலை & வர்த்தகம் புதிய பிரிவு

ஆரம்பம் :- 06.04.2025 ஞாயிறு காலை 09 மணி

அனுமதியை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(C-2612) தொடர்புகளுக்கு : 076 535 0999



# DCM - யாழ். நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

A/L 2027

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் – 06.04.2025 (ஞாயிறு) 9.00 Am

நிர்வாகம் : 077 778 9815

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(3793)



நாளை ஆரம்பம்

A/L - 2027

கலை, வர்த்தகம்

காலை 9 மணி

DMI யாழ். நகர்

077 848 0604

(3751)



KBK கொழும்புத்துறை

புதிய பிரிவு

A/L 2027 கணக்கீடு



MR.BALAKAJEN SLTS

B.com(Jaf), H.N.Dip.in.Acc(ATI), Dip.in.Edu(OUSL), M.com(Hons) Acc.spl

ஆரம்பம்

05.04.2025 சனிக்கிழமை

மதியம் 2.00 மணி

ADMISSION OPEN NOW

A/L 2025/ DAY /2026

பிரிவுகளுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

A+ சித்தி உறுதி

உங்கள் அனுமதிகளுக்கு

(C-2609)

077 452 0043



# K.P.C

இருபாலை வீதி, கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகில்)

A/L - 2027 வர்த்தகப்பிரிவு

ஆரம்பம் : 06.04.2025 ஞாயிறு 2.30 p.m

பொருளியல் : S.Jeyakumar

கணக்கீடு : A.T. Suren

வணிகக்கல்வி : T.S. Richi

(3846)

தொடர்பு : 077 723 8597



# வேலைக்கு ஆட்கள் தேவை

கணக்காளர் - 02

20 வயது – 50 வயதுக்குட்பட்டவர்கள்

யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது.

(3848)

077 468 3354



நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்

A/L - 2027

கலை, வர்த்தகம் : சனி 6.30

கணித, விஞ்ஞானம் : சனி 9.00

ஆரம்பம் – 05.04.2025 சனிக்கிழமை

(3834)



புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை

## கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம் பங்குனி உத்தரப்பொங்கல் – 2025 வியாபார நிலையங்களை ஏலம் வழங்கல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 11.04.2025 ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவத்தின் போது வாணிபங்கள் மேற்கொள்ள விரும்பும் வர்த்தகர்களுக்கான ஏலத்தில் விடப்படாத ஏனைய வர்த்தக நிலையங்களை ஏலத்தில் வழங்குதல் எதிர்வரும் 06.04.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும். உற்சவ கால வியாபாரத்திற்காக கடைகளை ஏலத்தில் பெற விரும்புகின்றவர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:

1. ஏலத்தின் போது முழுத்தொகையும் செலுத்தப்படல் வேண்டும்.
2. பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபை,

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்.

(C-2617)



# Village Hotel

Bus Booking (A/C Bus)

பருத்தித்துறை → கொழும்பு

யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)

நெல்லியடி → கொடிகாமம் ஊடாக

(3625)

www.villagehotel.lk

077 544 8503



# உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- திருகோணமலை
- கோப்பாய்
- பண்டத்தரிப்பு
- கொழும்பு
- சுன்னாகம்
- மானிப்பாய்
- பருத்தித்துறை
- புத்தூர்
- சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.